www.tamilarangam.net

விலை: 2/-

# முன்னணிச் செய்தி

இதழ் 7 பெப்ரவரி 1986 பக்கங்கள் 16

**காரணம் என்ன?**

அன்னையர் முன்னணியின் கச்சேரி மறியல் போராட்டம் நிச்சயமான காரணங்கள் எதுவுமின்றி கைவிடப்பட்டுள்ளது! தமிழீழத்தின் 'மேட்டுக் குடியினரின்' வற்புறுத்தலா இதன் பின்னணி என்று சந்தேகிக்கப் படுகிறது!
'யாரும் போராடட்டும்! எங்களுக்கு அலுப்பில்லாமல்'

தொழிலாளர்களே! விவசாயிகளே!! மாணவர்களே!!! பரந்துபட்ட பொதுமக்களே!
பாசிச அரசின் இக் கொலைவெறிச் சட்டத்தை எதிர்த்து கிளர்ந்தெழுவோம்!

## பாதுகாப்பு வலயச் சட்டம் படுகொலைக்கு வகுத்த புதுத்திட்டம்!

குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி சிறிலங்கா பாசிச யூ.என் பி அரசின் மிலேச்சப்படைகள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் நரபலி வேட்டையாட வகை செய்யும் விதத்தில் புதிதாக உருவாக்கப் பட்ட சட்டம் தான் ''பாதுகாப்பு வலயச் சட்டம்'' இதன்படி, இராணுவ முகாம்களை சுற்றி ஒரு கிலோ மீற்றர் எல்லைக்குள் வருபவர் எவரும் எதுவித காரணமும் இன்றிச் சுட்டுத்தள்ளப்படலாம்! இந்த எல்லைக்குள் உள்ள வீடுகள், வயல்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் அவற்றின் மீதும் கனரக பீரங்கிகள் எந்த நேரமும் விரும்பியபடி குண்டு மாரி பொழியலாம்! தமிழீழ மக்களை கொன்று குவிக்கவும் குடாநாட்டு வீதிகளைப் பிணக்காடாக்கவும் அரசு விடுத்துள்ள புதிய படுகொலைத் தந்திரமே இந்தச் சட்டமூலமாகும்.

ஸ்ரீலங்கா இனவெறி அரசின் இந்தப் பிரகடனம், தமிழீழத்தில் அப்பாவித் தமிழ் மக்களை நோக்கி எழுப்பப்பட்டுள்ள போர்ப் பிரகடனமாகும். உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாத விதத்தில், தமிழீழத்தில், ஒரேநாடு, ஒரேநாடு ஒற்றை ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் என்று பசப்பிக் கொண்டே, கனரக பீரங்கிகளால் பொதுமக்களை தாக்குகின்ற புதிய பாசிச வழி முறையை உலகப் பிற்போக்காளர்களுக்கு முன்மாதிரியாககாட்டத் தொடங்கியுள்ளது. இந்த மிலேச்சத்தனமான காட்டு மிராண்டி யூ.என். பி. பாசிச இனவெறி அரசு.

இந்தச் சட்டத்தின் மூலம் இராணுவமுகாம்களைச் சுற்றியுள்ள பொது மக்கள் கணமும் மரணபயத்துடன் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுகின்றனர். சூழவுள்ள கிராமங்களில் தொடர்ந்து படுகொலைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது அரச கூலிப்படைகள்.

காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை தொழிலாளர்கள், யாழ்ப்பாணம் பிரதம தபால் கந்தோர் ஊழியர்கள், யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் எந்தக்கணமும் தமது உயிர் பறிக்கப்படலாம் என்ற நிலையில் உள்ளனர்.

(10-ம் பக்கம் பார்க்க)

கச்சேரி முன்பாக

## அன்னையர் முன்னணி மறியல் போராட்டம்

ஸ்ரீலங்கா பாசிச யூ.என்.பி அரசின் 'பாதுகாப்பு வலய' சட்டத்தை எதிர்த்து கச்சேரி முன் அன்னையர் முன்னணியின் மறியல் போராட்டம் தொடர்கிறது. பாதுகாப்பு வலயத்தை அரசு வாபஸ் வாங்காத வரை தமது மறியல்போராட்டத்தை தொடரப் போவதாக அறிவித்துள்ள அன்னையர் முன்னணியின் இந்தப் போராட்டத்தை நாம முழுமையாக வரவேற்கிறோம்.

ஸ்ரீலங்கா இனவெறி அரசின் இந்தப் பாசிச இனப் படுகொலைகளைஎதிர்த்து மக்கள் தமது போராட்டங்களை மேலும் மேலும் அதிகமாக தீவிரப்படுத்த வேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

செய்தி வெளியீட்டுப்பிரிவு, தமிழீழ தேசிய விடுதலை முன்னணி [N.L.F.T.]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னணிச் செய்தி
இதழ் 7
பெப்ரவரி 1985

## இயக்கப் படுகொலைகளை நிறுத்துவோம்! புரட்சிகர மக்களை யுத்தப் பாதையில் முன்னேறுவோம்!

சென்ற வருடம் யூன் மாதத்தில் போர்நிறுத்த அறிவித்தல் வெளியிடப்பட்ட போது, அது தமிழீழ மக்களிடையே ஒரு நிம்மதிப்பெரு மூச்சை விடவைத்ததை யாரும் மறுக்க முடியாது. இந்தப் போர் நிறுத்தம், போர் நிறுத்த இடைக்காலத்தில் அரசு தன்னை முழுமையாகத் தயார் செய்து கொள்வதற்கான திட்டத்துடன் தானே விரும்பி உருவாக்கிக் கொண்ட ஒன்றுரும். இருந்த போதும், இதுபற்றி பரவலாக சுட்டிக் காட்டப்பட்டபோதும் இராணுவ ரோந்துகள் குறைவதும், கெடுபிடியான வாழ்க்கை முறைக்கு ஒரு தளர்வு கிடைப்பதும், அன்று மக்களுக்கு திருப்தி அளிப்பதாகவே இருந்தது.

'போர் நிறுத்தம் வேண்டாம்' என்று பல்வேறு விடுதலை இயக்கங்களின் பின்னணியில் 'மக்களை கொணர்ந்து எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தப்பட்ட போதும் மக்களது விருப்பமே அன்று வெற்றி பெற்றது; இத்தகைய போராட்டங்கள் அன்று ஓய்ந்து போயின.

இந்தப் போர்நிறுத்த இடைக் காலத்தில், அதற்கு முன்பு நடைபெற்றது போலவே, படுகொலைகளும், தீவைப்புகளும் சூறையாடல்களும் ஸ்ரீலங்கா கூலிப்படைகளினால் நடத்தப்பட்டனவாயினும் கூட, இவையெல்லாம, யூன் மாதம் 18ம் திகதிக்கு முன்னைய நிலைமை போல அல்லது, பிரஜைகள் குழுக்களாலும் கண்காணிப்புக் குழுக்களாலும் கட்டுப்படுத்தப்படும் விவகாரங்களாக மாறிட போயின.

இந்த இடைக்காலம் அண்மையில் கோட்டை இராணுவம் நடத்திய வெறித் தாக்குதலையும் பாதுகாப்பு வலயச் சட்டத்தையும் அடுத்து வெறும் பிரமையே என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இதற்குள் எவ்வளவோ நடைபெற்று விட்டன.

ஸ்ரீலங்கா யூ என்.பி பாசிசஅரசானது, இந்த இடைக் காலத்தில் தன்னை மேலும் நவீனமயப்படுத்திவிட்டது புதிய புதிய 'தந்திரோபாயங்களை' கனரக இயந்திரங்களை மக்களை நோக்கி போருக்கு வசதியாக உருவாக்கி விட்டது. அனைத்து சர்வதேசப் பிற்போக்காளர்களிடமும் பேசி தனது தயார் நிலையை உறுதிசெய்து கொண்டு விட்டது. சிறிமாவோ அம்மையாருக்கு குடியுரிமையை வழங்கியும், சந்தா முதலாளி தொண்டமானின் 'பிரார்த்தனைப் போராட்டம்' என்ற கப்சாவுக்கு பயந்தது போல நடித்து பிரஜா உரிமை வழங்குவதாக 'வாக்குறுதி' கொடுத்தும், தனது ஜனநாயக பண்பை வெளிக்காட்டி ஒரு சாதகமான சூழலை உருவாக்கியும் கொண்டுள்ளது.

இப்போது 'இராணுவத் தீர்வே வழி' என்று நிமிர்ந்து நின்று கொக்கரிக்கவும், தமிழீழப் போராளிகளை கொலைக்காரர்கள்,கயவர்கள் என்று பாராட்டவும்' அவர்களை கொல்வது 'தர்மிஸ்டம்' என்று பேசவும் துணிந்து விட்டது.

அரசு தரப்பில் தமிழீழத்தின் தேசியப் புரட்சிக்கு எதிராக பலமான தாக்குதலைக்கொடுக்கும் தயார் நிலையை உருவாக்கியது மட்டுமன்றி, இப்போர்நிறுத்தம் தமிழீழத்தின் புரட்சிகர சக்திகளிடையேயும், ஜனநாயக சக்திகளிடையேயும் ஒரு அவநம்பிக்கையையும் ஊசலாட்டத்தையும்கொடுத்துள்ளது.

இலங்கை அரசின். போர் நிறுத்தமும், அரசுக்கும் இயக்கங்களுக்குமிடையிலான மோதல்களின் எண்ணிக்கை அளவிலான குறைவும், விடுதலை இயக்கங்களுக்கும் அரசுக்குமிடையிலான முரண்பாட்டைவிடவும், அவற்றுக்கு இடையிலான முரண்பாடுகளை பிரதானப்படுத்தும் போக்கை வளர்த்துவிட்டன. இந்த இடைக்காலத்தில்.பலவேறு இயக்கங்களிடையே பலதடவைகள் மோதலும், உயிர்ப்பலிகளும் ஏற்பட்டுள்ளன.

இறுதியாக, தமிழீழ விடுதலைப் புலிகளின், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர் றேகன் படுகொலை இந்த முரண்பாடுகள் எவ்வளவுக்கு படுமோசமடைந்துள்ளன என்பதை தெளிவுபடுத்துகிறது.

## தோழமையுடன்
## ஆசிரியர் குழு

இந்த நடவடிக்கைகள், இயக்கங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை இன்மையையும், ஐக்கிய மின்மையையும் அராஜகத் தனமான போக்குகளையும் மேலும் வளர்த்து விடுவதுடன், நாம் மேலே சொன்ன அவநம்பிக்கையையும் ஊசலாட்டத்தையும் மேலும் வளர்த்துவிடவே செய்யும்.

எதிரி தன்னைப் பலப் படுத்துவதற்கும், மக்களை அழித்தொழிப்பதற்கும் திட்டமிட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இயக்கங்கள் தமக்குள் மோதிக் கொண்டிருப்பது மேலும், தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பின்னடிக்க செய்யவும் சீர்குலைக்கச் செய்யவுமே வழிவகுக்கும். இயக்கங்களிடையே கூட்டு ஐக்கியம் என்றெல்லாம் பத்திரிகைகளில் எழுதுவதாலும் பேசுவதாலும் உண்மையான ஐக்கியம் ஏற்பட்டுவிடப்போவதில்லை. நடைமுறையில் உண்மையான ஐக்கியமும் புரிந்துணர்வும் இல்லாதபோது எந்தக்கூட்டும் வெறும் அர்த்தமற்ற வாய்ச்சொற்களாகவே அமையும்.

தமிழீழத்தில் தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலேயே இதை ஒரு சமாதானமாக, முரண்பாடுகள் அற்ற, வர்க்கப் பிரிவுகளற்ற சமூகமாக கருதும் போக்கு நிலவுகிறது இது உண்மையை மறுப்பதாகும் தமிழீழத்தில் தேசியரீதியான ஒடுக்குமுறை பிரதானமடைந்துள்ள போதும் இங்கு வர்க்கங்

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கசிப்பு ஒழிப்பு என்ற பெயரால் கூலித் தொழிலாளர்களைத் தாக்காதீர்கள்!

## கோடாலிக் காட்டில் கூலித் தொழிலாளர் மீதான தாக்குதல்

## தொழிலாள வர்க்கத்தை தொடர்ந்தும் அச்சுறுத்தும் நடவடிக்கையா?

ஒரு சில வருடங்களாக கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் பெருகி வருவது பரவலாக தெரிந்த விடயம். இக் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் பெரும்பாலும் சீவல் தொழிலாளர்கள், கூலிஉழைப்பாளர்கள் வாழும் கிராமங்களில்தான் நடைபெற்று வருகிறது. மறுபுறத்தில் விடுதலை ஸ்தாபனங்களும் விழிப்படைந்த இளைஞர் குழுக்களும் பிரச்சார மூலமாகவும், கூடியளவு பலாத்கார மூலமாகவும் கசிப்பு உற்பத்தி விற்பனையை எதிர்த்தும், தடுத்தும் வந்துகொண்டிருக்கின்றனர்.

இத்தகைய கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையின் போது ஆயுதம் தாங்கிய குழுக்கள் தொழிலாளர் மீது தாக்குதல்களை கட்டவிழ்த்து விடுவதும் கைது செய்து துப்பாக்கி முனையில் விசாரணை செய்வதும் போன்ற நடைமுறைகளால், பரவலாக இத்தகைய செயலில் ஈடுபடுகிற, ஈடுபடாத அனைத்து தொழிலாளர்கள் மத்தியிலும் எதிர்ப்புணர்வுகளை சம்பாதித்து செல்லுகின்றன.

இந்த கசிப்பொழிப்பு தாக்குதல்கள் வரிசையில் தான் கோடாலிக் காட்டு சம்பவமும் நடந்துள்ளது.

அண்மையில் கோடாலிக்காடு கிராமத்தில் இரு விடுதலை ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றும் மாறிமாறி, இவ்வூரிலுள்ள ஒன்றிரண்டு இளைஞர்களை சேர்த்துக் கொண்டு மூன்று நான்கு தடவை கசிப்பு ஒழிப்பு வேட்டை நடாத்தினர். இந்தக் கசிப்பு போராட்டத்தின் போது அவ்வூர் மக்கள் பலர் அநியாயமாக தாக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் உள்ளனர்.

இறுதியாக நடைபெற்ற கசிப்பு வேட்டையின் போது ஒரு குறிப்பிட்ட வீடொன்றில் புகுந்து சோதனையிட்ட 'கசிப்பு வேட்டையாளர்கள்' அங்கு கசிப்பு இல்லை என்று தெரிந்த பின்னும் அத்துமீறி சோதித்ததன் காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில், வீட்டு உரிமையாளரும் அயல்வீட்டுக்காரர்களும் விறகு கட்டைகளால் தாக்கப்பட்டனர். தான் கசிப்பு உற்பத்தி செய்யவில்லை ஆகவே தவறு செய்யவில்லை என்பதற்காக விவாதிக்கும் குறைந்தபட்ச உரிமைகூட இந்த 'கசிப்பு வேட்டையாளர்களால்' மறுக்கப்படுவதை இட்டுகிராமமக்களுக்குஏற்பட்ட பலத்த ஆத்திரத்தையும் எதிர்ப்புணர்வையும் வெளிக்காட்ட அவ்வூர் தொழிலாளர்கள் ஒரு கண்டன ஊர்வலத்தை ஒழுங்கு செய்தனர்.

அதன்படி இத்தாக்குதலிற்கு மறுநாள் சுமார் நூறு பேர்களை கொண்ட ஊர்வலம் கோடாலிக்காடு, மாரிசன் கூடல், இளவாலை மேற்கினூடாக நகர்ந்து கொண்டிருந்தது. இத் தொழிலாளர்கள் கசிப்பு உடலுக்கு கேடு விளைவிக்கும் என்று அறிந்திருந்த போதும் பெரும்பாலும், தவிர்க்கமுடியாமல் உயிர்வாழ்வதற்கான உற்பத்தி நடவடிக்கையாகவே இதில் ஈடுபட்டிருந்ததால், 'கசிப்பு ஒழிப்பு நியாயமானது; ஆனால் கசிப்பு இல்லா வீடடில் ஏன் வெறியாட்டம்? கூலிகளைத் தாக்கினை விடுதலையா? கூலிக்காரர்கள் கிள்ளுக்கீரையா? என்பன போன்ற கோசங்களுடனே இவ்வூர்வலம் நகர்ந்தது.

இந்த கசிப்பு ஒழிப்பு நோக்கில் நடைபெற்ற தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்துவதற்கு காரணம் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை அல்ல, மாறாக, கூலித்தொழிலாளர்கள்தானே என்ற இளக்கமான நினைப்புடன், இவர்களை எப்படியும் யார் வேண்டுமானாலும் தாக்கலாம் என்ற நிலை உருவாகி இருப்பதும், அதுவே, இவர்களுக்கு தர்பக்க நியாயத்தைக் சொல்ல அனுமதிக்காது தாக்கியதற்கான காரணமும் என்பதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புணர்வே இவ்வூர்வலத்தை நடத்தியதற்கான காரணமாகும்.

ஆனால், இவ்வூர்வலம், இக் கசிப்பு ஒழிப்பில் பங்குகொண்ட அயற்கிராமத்தை சேர்ந்த இளைஞர் கோஷ்டியினால் இளவாலை மேற்கில் வைத்து தடுக்கப்பட்டது; கோசங்கள் எழுதிய அட்டைகள் கிழித்தெறியப்பட்டன. ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் தடிகளால் நையப்புடைக்கப்பட்டனர். இவர்களுள் ஒருவர் பலத்த தாக்குதலின் பின் மின்கம்பத்தில் கட்டப்பட்டார். (இவர் பின் வேறொரு இயக்கத் தோழர்களால் விடுவிக்கப்பட்டார்.)

இந்த தாக்குதலில் பங்குபற்றியவர்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளர்களே. தொழிலாளர்களது எழுச்சியை நசுக்க தொழிலாளர்களை பயன்படுகின்ற விதத்தில் தொழிலாளர்கள் மத்தியில் பிளவுகளை மேலும் வளர்த்துவிடுகிற விதத்தில், இத்தகைய கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் உருவாகியுள்ளன. இவை பிறருக்கு சாதகமாகவும் கசிப்பு உற்பத்தியை ஒரு தொழிலாக லாபகரமாக செய்கிற வசதிபடைத்தவர்கள் மேலும் லாபமடைவதையும் (இவை பெரும்பாலும் இயக்கங்களால் தடுக்கப்படுவது குறைவு; அவர்கள் எவ்வாறோ இதை சமாளித்து விடுகிறார்கள்) தொழிலாளவர்க்கம் வர்க்க உணர்வு பெற்று எழுவதமகுப் பதில் கூலிப்பட்டாளமாக மாற்றப்படுவதாயும் உள்ளது.

முன்னர் கோடாலிக்காடு கிராமத்தில் கசிப்பு வேட்டை நடாத்திய

(தொடர்ச்சி 15-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூட்டணியின் மாற்றுத்திட்டம் ஒரு புதிய காட்டிக் கொடுப்பே!

தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ந்து வரும் வேகத்திற்கு தலைமை கொடுக்க முடியாமலும், சிறிலங்கா பாராளுமன்றத்தில் இருந்து அரசியல் பிழைப்பு நடத்த முடியாமலும் இந்தியாவிற்கு சென்றுவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தற்போது, தமிழீழத்துக்குப் பதில் ஒரு மாற்று 'யோசனை'யை ரஜீவ் காந்தியிடம் கையளித்துள்ளது

அடிக்கடி இவ்வாறு புதுப்புது யோசனைகளை தெரிவிப்பதும் பத்திரிகைகள் மூலம் அவை பிரபல்யமாவதும் என்ற நடைமுறையினூடாகவே இன்னும் மக்களிடம் அடிபட்டுக் கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள புதிய யோசனை தான் வடக்கு கிழக்கு இணைந்த மாநில அமைப்பு. இந்தியாவில் உள்ளது மாதிரியான இந்த வகை அமைப்பின் மூலமாவது தான் பிரதித்துவப்படுத்தும் தமிழ் தரகு அதிகார வர்க்க நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்தை வடக்குக் கிழக்குப் பகுதியில் நிறுவ கூட்டணி புதிய முயற்சி எடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்தின் பரந்துபட்ட மக்களது வாழ்வின் தேவையாக அமைந்து விட்ட தமிழீழத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து தமது சந்தர்ப்பவாத செயல்பாடுகளால் காட்டிக் கொடுத்தே வந்துள்ளது. தமிழ் நிலப் பிரபுத்துவ தரகு அதிகார வர்க்கத்தினரது வர்க்கநலன்களை பேணும் கட்சியாக, சிங்கள ஆளும் வர்க்கங்களுடன் போட்டியிட்டு 'கோட்டா' பேச்சுவார்த்தை நடாத்தும் தரகர்களாக இருந்த இந்த கூட்டணியினர், இன்று தமிழீழம் தனி அரசானால், அதிலும் தமது அதிகாரத்தை நிறுவிட வேண்டும் என்று துடியாய் துடிக்கின்றனர். தமிழீழத்தில் சிங்கள ஆளும்வர்க்கங்களால் வஞ்சிக்கப்பட்டுள்ள தமிழ்தரகு அதிகாரவர்க்க நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் நலன் பேணும் இக் கூட்டணி, மாநிலசுயாட்சி அளவு அதிகாரமாவது கிடைக்காதா என்ற நப்பாசையுடன் வைத்துள்ள திட்டமே இத்திட்டமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு போதும் தமிழீழ மக்களை சார்ந்து நின்று, அவர்களில் நம்பிக்கை வைத்து செயற்பட்டது கிடையாது. மக்கள் விரோதிகளையும் பிற்போக்காளர்களையும் சார்ந்து நிற்கவும், தமிழீழ மக்களின் தலைவிதியை எந்தவொரு வல்லரசிடமாவது அடகு வைக்கவும் தமது வர்க்க நலனுக்காக தேசத்துரோக நிலை எடுக்கவும் தயாராக உள்ளது. தமது வர்க்க நலனை நோக்கமாக கொண்டு, இந்திய பிராந்திய விஸ்தரிப்புவாதிகளை ஆக்கிரமிக்கும்படியோ, படை அனுப்பும்படிகோரவோ கூட்டணியினர் தயங்குவது கிடையாது.

இன்று முழுக்க முழுக்க இந்தியாவிடம் சரணாகதி அடைந்து, இந்திய ஆளும் வர்க்கங்களின் கையில் தமிழீழத்தின் தலைவிதியை ஒப்படைத்துவிட்டு' ராஜீவ் காந்தியின் கடைக்கண் கடாட்சம்தான் தமிழீழ மக்களது விடிவுக்கு வழியென்று தமது கையாலாகாத் தனத்தை மூடி மறைத்து பிரலாபித்து வருகிறது இந்தக் கூட்டணித் திருக் கூட்டம்.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் சரணாகதி வாதிகளும், இந்தியாவை தென்னாசியப் பிராந்தியத்தின் தனிக் காட்டு ராசா வாக்க முயன்று வரும் இந்திய விஸ்தரிப்பு வாத ஆளும் வர்க்கங்களும் கூட்டாக பிரேரித்து வரும் மாநில சுயாட்சி (Autonomy) முறை என்பது தமிழீழத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதுரோகச் செயலாகும். தமிழீழ விடுதலைக்காக போராடும் தமிழீழ மக்களின் முதுகில் குத்துகின்ற கடைகெட்ட செயலாகும்.

தமிழீழத்தின் தேசிய இனப்பிரச்சினையானது, ஆட்சியிலுள்ள சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த ஆளும் வர்க்கங்களுடனான பேச்சு வார்த்தையால் கிடைக்கக் கூடியதல்ல. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதற்குப் பிரிந்து செல்லும் உரிமை வழங்கப்படாத வரை' ஸ்ரீலங்கா ஆளும் வர்க்கங்களுடன் பேரம் பேசி சலுகை பெறுகின்ற எந்த சீர் திருத்த சந்தர்ப்ப சமரசத் தீர்வுகளும் தமிழீழ மக்களுக்கு எந்த உரிமைகளையும் தந்துவிடப் போவதில்லை ஏனெனில் சுயாட்சியோ அல்லது வேறு எந்தவிதமான அதிகாரத்தைக் கீழ் மட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முறையோ, ஸ்ரீலங்கா ஆளும் வர்க்கங்களின் அதிகாரங்களிற்கான அத்திவாரங்களை சிதைக்காமல் அப்படியே வைத்துக் கொள்வதும் அது பழுது படாமல் ஒடுக்கப்படும் தேசிய இனமான தமிழ் தேசிய இனத்திக்கு சில்லறை சலுகைகளை வழங்கும் முறையாகும். இது சீர் திருத்த முறையே, இச் சீர் திருத்த முறை எல்லா வடிவங்களிலும் நிலவும் தேசிய ஒடுக்கு முறையை ஒழித்துக் கட்டுவதல்ல. ஒரு சுயாட்சியை (Autonomy) ப் பெற்றிருக்கும் இனம், ஆளும் இனத்துடன் சம உரிமைகளை பெற்றுவிட

(13-ஆம் பக்கம் பார்க்க)

**மாநில சுயாட்சி என்பது**
**கடைகெட்ட சந்தர்ப்பவாதமே!**
**மக்கள் ஜனநாயகக் குடியரசே**
**தமிழீழ மக்களின் தேவை!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நாடற்றோர் பிரச்சினைக்கான தீர்வு:

## இ. தொ. கா.வின் பிரார்த்தனை இயக்க வெற்றியாம்!

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கப்சா!

நாடற்றோர் பிரச்சினையை தீர்ப்பதாக குறிப்பிட்ட அரசு, 94,000 குடும்பங்களுக்கு பிரஜா உரிமை வழங்குவதாக அறிவித்துள்ளது. தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பிரார்த்தனை இயக்கத்தினதும், தொழிலாள வர்க்கத்தினதும் வெற்றி இதுவென தொண்டமான் கருத்து வெளியிட்டுள்ளார்.

1940களின் பிற்பகுதியில் இலங்கை அரசினால் பிரஜா உரிமை அற்றவர்களாகவும், வாக்குரிமை அற்றவர்களாகவும் அதாவது நாடற்றவர்களாகவும் மாற்றிய சட்டத்தை அன்றைய இந்திய அரசும் ஏற்றுக்கொண்டிருந்தது. பின்னர் நேரு கொத்தலாவல ஒப்பந்தங்கள், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தங்களால் (1954 1964) இலங்கைத் தோட்டத்தொழிலாளர்களது நாட்டு நிலைமை பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமையைப் பறித்தபோதும்சரி, ஒப்பந்தம் செய்துகொண்டபோதும் சரி இலங்கை இந்திய [illegible] உடன்பாட்டுடனேயே செயல்படுத்தி வந்தன. தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவித்தல் மட்டும் இலங்கை அரசினால் மட்டுமே சுயாதீனமாக எடுக்கப்பட்ட முடிவாக யாரும் எதிர்பார்த்து விட முடியாது.

ஆயினும் இந்த நாடற்றோர் பிரச்சினையை தீர்ப்பதற்கான முடிவு, பிரார்த்தனைப் போராட்டத்தின் வெற்றி என்பதைவிட ஏமாற்றான கூற்று வேறு எதுவாகவும் இருக்க முடியாது. தொண்டமான், தொழிலாளர் காங்கிரஸின் ஆரம்பத்திலிருந்தே தொழிலாள வர்க்கத்தை காட்டிக் கொடுக்கவும் அவர்களது போராட்டங்களைச் சிறுமைப்படுத்தி ஆளும் வர்க்கங்களுடன் பேரம் பேசி ஒத்துப்போகவும் நெருக்கடி நேரங்களில் துரோகமிழைக்கவும் தயங்கியது கிடையாது.

நாடற்றவர் பிரச்சினை தீர்க்கப்படுவதால், தனதும் தனது கட்சிக்கும் மேலதிகமாக கிடைக்கப்போகும் பாராளுமன்ற அரசியல் வாழ்வுக்கு உதவும் 'வாக்குகள்' பற்றிய கண்ணுயிருந்த சந்தா முதலாளி தொண்டமான் ஒரு போதும் குறைந்த பட்சம் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளுக்கான தொழிற்சங்கப் போராட்டங்களைக் கூட உறுதியாக முன்னெடுத்தவரல்ல. பெருமளவு தொழிலாளர்களை கொண்டுள்ள போதும், இச்சங்கம், ஆட்சியாளர்களுடன் சமரசம் செய்வதன் மூலம் இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்களின் நலன்களையும் அமெரிக்கா மற்றும் அமெரிக்கா சார்ந்த நாடுகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டுச் சக்திகளின் நலன்களையுமே பிரதானப்படுத்தி வந்துள்ளது. இவற்றின் அடிப்படையிலேயே தொண்டமானின் அரசியலும், தொழிற்சங்க போராட்டங்களும் அமைந்துள்ளன. தொழிலாள வர்க்கத்தை தமது இந்த நலன்களுக்கு சாதகமாக பகடைக் காய்களாக பயன்படுத்தி வந்த இந்த துரோகி தொண்டமான், தமிழர்கள் என்பதற்காகவே தோட்டத் தொழிலாளர்கள் விசாரணையின்றி படுகொலை செய்யப்பட்ட போதும், கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்ட போதும், ஸ்ரீலங்கா இனவெறி பாசிச யூ.என்.பி அரசுடன் கைகோர்த்தபடியே, அவர்களது அரசியல் இருப்புக்கும் சுரண்டல் வாழ்வுக்கும் நெருக்கடி வராத விதத்தில் மிகவும் வெக்கக்கேடான விதத்தில் அறிவிக்க சரணடைவு மார்க்கம் தான் இந்தப் பிரார்த்தனைப் போராட்டம். தொழிலாள வர்க்கத்தை நிராயுதபாணியாக வைத்துக் கொண்டே, வெற்றுத் தொழிற்சங்கப்பாதையிலே அமிழ்த்தியபடியே, தனது வாக்கு வேட்டைக்கு சாதகமான தீர்வைத் தொண்டமான் பெற்றுள்ளார். உண்மையில் தொண்டமானுக்கும், அவரது அரசியல் சகபாடிகளுக்குமே யன்றி இலங்கை அரசின் இந்த அறிவித்தல் அதிக நன்மைகள் எதையும் தந்துவிடப் போவதில்லை.

1947 48-ம் ஆண்டுகளிலேயே இந்த காங்கிரஸ் தொண்டமானுக்கு ரூபா 1,31 172.91½ சதம் கடன்பட்டிருந்தது என்பதை பலர் அறிந்திருக்க முடியாது. தொண்டமானிற்கு இந்தளவு பெருந்தொகையான பணத்தை வழங்குவது அமெரிக்காவும் அமெரிக்கா சார்ந்த நாட்டு நிறுவனங்களுமே, வெவ்வேறு வகைகளில், உலகப் பிற்போக்காளர்களிடம் பொருளாதார உதவியைப் பெறுகின்ற இந்த சங்கம், அமெரிக்காவினது கையாட்களாக இலங்கை மக்களை ஒடுக்கி வரும் இலங்கை அரசுடன் நட்புடன் செயல்படுவதும், அவை கூட்டாக திட்டமிட்டே தொழிலாளர்கட்கு பிச்சை இடுவது போல சில்லறை உரிமைகளை வழங்குவதும், தொழிலாளவர்க்கத்தை புரட்சிப் பாதையிலிருந்து திசை திருப்பவும், ஏமாற்றவும், தாம் சார்ந்துள்ள தரகு அதிகார வர்க்க நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் மற்றும் ஏகாதிபத்தியங்களை வாழ்விக்கவுமேயாகும். தொழிலாளருக்கு வெற்றி என்பதெல்லாம், மிகவும அப்பட்டமான புழுகு மூட்டையேயாகும்.

பல்வேறு விதமான சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களை, தொழிற் சங்கவாத புதைகுழியிலிருந்து மீட்டெடுத்து, புரட்சிப் பாதையில் நடையிடச் செய்யும் எந்த முயற்சிக்கும் எதிராக தமது பாசிசக் கரங்களை பயன்படுத்த தயங்காத யூ.என்.பி அரசும் தொழிலாளர் புரட்சிகர அணியில் நடைபோட்டால் தமது பிற்போக்கு நலன்கள் பாதிக்கப்பட்டுவிடும் எனத் தீவிரமாக அஞ்சும் இ.தொ.காவும், இந்திய விஸ்தரிப்புவாதிகளும் கூட்டாக செய்யும் சதி நடவடிக்கைகளினால் தற்செயலாக, தவிர்க்கமுடியாமல் தொழிலாளர்கட்கு கிடைத்திருக்கும் ஒரு சிறு உரிமையே இந்த உரிமையாகும்.

அத்துடன், இலங்கை அரசு அறிவித்துள்ள போதும், இதை அது நடை

(12-ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொன்னாலையில் நடந்தது என்ன?

**பொன்னாலையில் இருந்து காரைநகருக்கு கடலினூடாகச் செல்லும் பிரதான வீதியின் இருமருங்கிலும் கடற் தொழில் புரியும் தொழிலாளர்கள் கடந்த சில மாதங்களாக போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். இது பற்றிய உண்மைகளை அறிய சென்ற எமது நிருபர் திரட்டிய அறிக்கை இது.**

அரம்பகால முதல் இப் பாலத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் இருக்கும் கிராம மீனவர்கள் இழுவைத் தொழில் செய்து வந்தார்கள். 1979ம் ஆண்டு திடீரென சிலர் களங்கண்ணி வலைகளைக் கொண்டு வந்து தொழில் புரிய ஆரம்பித்தனர். இதனால் களங்கண்ணி வலைகளில் தான் அதிகளவு இறால், மீன்கள் படத் தொடங்கின. இழுவைத் தொழிலாளர்களை இது மிகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது. அன்றாட உணவுக்கே அல்லாடும் நிலைக்கு அவர்களைத் தள்ளியது. தனியாய்த் தவித்த அவர்கள் சில 'பெரிய மனிதர்களிடம்' எடுத்துக் கூறினார்கள். அப் பெரிய மனிதர்கள் எவ்வித அக்கறையுமற்று இருந்தார்கள்.

பின்னர், தாங்களே களங்கண்ணி வலைகளை அகற்றி காங்கேசன்துறைப் பொலிசாரிடம் தமது பிரச்சனைகளை தெரிவித்து ஒப்படைத்தனர். ஆனால் ஆளும் வர்க்கங்களின் கூலிப்படையாக இயங்குகின்ற பொலிசார் தங்களுக்கு சாதகமாக இருக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் அனுபவ வாயிலாக உணர்ந்து கொண்டார்கள். திரும்பவும் பொன்னாலைக் கடலில் களங்கண்ணி வலை போடப்பட்டது இதன் பின்னர் இழுவைத் தொழிலாளர்களுக்கும் களங்கண்ணி வலைக்காரர்களுக்கும் இடையிலான வர்க்க முரண்பாடு கூர்மையடைந்தது.

இவ்வேளையில் அப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தா. திருநாவுக்கரசுவுக்கும் சங்கானை உதவி அரசாங்க அதிபருக்கும், அப்போதைய எதிர்க்கட்சி முதல்வர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கும் முழுப்பிரச்சினைகளையும் எடுத்துக் கூறி இதனைத் தீர்த்து வைக்கும் படியும் கூறினார்கள். தாங்கள் இதனைத் தீர்த்து வைப்பதாகக் கூறிய இவர்கள் இருபகுதியினரையும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அழைத்தனர். அங்கு ''களங்கண்ணி வலைகாரர்களும் உங்களை மாதிரி தொழிலாளர்கள் தானே. அவர்கள் 1ம் பாலத்திற்கும் 2ம் பாலத்திற்கும் இடையில் கடற் பள்ளத்திலிருந்து 100 யார் தூரத்திலிருந்து களங்கண்ணிவலை போடலாமென தங்களுடைய தீர்வை சொல்லி நீளக்காரில் ஏறிச் சென்றனர்.

நாட்டின் நிலைமை சீர்கேடுற்றதும் வடபகுதியில் சிவில் நிர்வாகம் பெருமளவு பாதிப்படைந்தது. இதனைக் களங்கண்ணி வலைக்காரர் வாய்ப்பாகப் பயன்படுத்தி, இழுவைத் தொழில் செய்யும் இடங்களையும் பாலங்களையும் மூடி களங்கண்ணி வலைகளைப் போட்டார்கள். களங்கண்ணி வலைக்காரர் 13 பேர் மட்டுமே ஆனால் இழுவைத் தொழில் செய்பவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். இதே வேளையில் களங்கண்ணி வலைக்காரர் 13 பேருக்குள்ளும் யார் முதலில் போடுவது எனப் போட்டி ஏற்பட்டது. இவர்கள் ஒவ்வொருவரும் மாறி மாறி வலைகளை வெட்டி விட்டு பொன்னாலையில் உள்ள பஞ்சாயத்திடம் இழுவைத் தொழிலாளர்களை குற்றம் சாட்டி ஒரு கடிதத்தை கொடுத்தார்கள் அதில் தங்களது வலைகளுக்கு நட்ட ஈடும் கோரியிருந்தார்கள் அதேவேளை பஞ்சாயத்திடம் இழுவைத் தொழில் புரியும் 246 பேர் கையொப்பமிட்டு ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். இரு பகுதியினரையும் அழைத்து விசாரிப்பதாக பஞ்சாயம் தெரிவித்தது.

திடீரென ஒருநாள் இருபகுதியினரையும் பஞ்சாயம் அழைத்தது திடீரென அழைத்ததால் இழுவைத் தொழிலாளர்களால் இதில் கலந்துகொள்ள முடியவில்லை.

இதனைச் சாட்டாக வைத்து பஞ்சாயம் ஒரு முன்னணியிடம் பிரச்சனையைக் கொடுத்தது. 21-8-85ல் இம் முன்னணி விசாரணையை ஐந்து இழுவைத் தொழிலாளர்களை ஒரு பாடசாலைக்கு அழைத்துச் சென்று, அவர்களைத் தாக்கி, ''நீங்கள் ஒரு மாதத்திற்கு கடலில் தொழில் செய்யக் கூடாது'' என்ற ஒரு தலைப்பட்சமான ஆணையுடன் நிறைவேற்றியது.

இதன் பின்னர் விடுதலை இயக்கமொன்று 28-4-85ல் பாடசாலையில் கூட்டமெனக் கூறி தொழிலாளர்களை தங்களுடைய முகாமிற்கு கொண்டு சென்று அங்கு ஈவிரக்கமின்றித் தாக்கியது. மயக்கமடைந்த தொழிலாளர்களை மயக்கம் தெளிய வைத்து, பின்னரும் தாக்கி 'ஒப்புதல் வாக்கு மூலம்' பெற்றனர். இதன்படி களங்கண்ணி வலைகளை இழுவைத் தொழிலாளர்களே அறுத்ததாகவும் அதற்கு நஷ்ட ஈடாக தலா 500 ரூபா ஒவ்வொரு தொழிலாளர்களும் கட்ட வேண்டும் எனப் பணித்த பின்னர் பஞ்சாயத்திடம் ஒப்படைத்தது.

பஞ்சாயம் இத்தீர்ப்பை 500/- லிருந்து 300/- ஆகக் குறைத்தது. இதனால் இவ்விரு இயக்கங்களினதும் பஞ்சாயத்தினதும் சார்பு நிலையை அம்பலப்படுத்தி துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டனர். இதனை அறிந்த ஒரு இயக்கம் பொன்னாலையில் தொழிலாளர்களின் கிராமத்துக்கு 20-9-85ல் ஆயுதபாணியாகச் சென்று துண்டுப் பிரசுரத்தை கிழித்தெறிய முற்பட்டனர். அங்குள்ள பெண்கள் அவர்களின் சேட்டினை பிடித்து இழுத்து சிலமணி நேரம் அவர்களை ஊரை விட்டு வெளியேற முடியாதவாறு மறியல் போராட்டம் செய்தனர். ஒரு மாதிரியாக வந்தவர்கள் இப் பெண்களிடமிருந்து தங்களை விடுவித்துச் சென்றனர்.

இச் சம்பவத்தின் பின்னர் பொன்னாலை தொழிலாளர்களும் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள அனைத்து இழுவைத் தொழிலாளர்களுக்கு தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறி ஒரு கடற்றொழிலாளர் நலன் புரிச் சங்கத்தை உருவாக்கினர். நலன்புரிச்சங்கம் பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தது.

(1) களங்கண்ணி வலைகளை உடனடியாக அகற்றும் படி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டது.

(2) அகற்றாவிட்டால் அனைத்து இழுவைத் தொழிலாளர்களும் ஊர்வலமாகச் சென்று களங்கண்ணிகளை அகற்றுவது.

இதைக் களங்கண்ணிக்காரர்கள் அசட்டையாக விட்டுவிட்டார்கள்.

பல்வேறுகிராமங்களைச் சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட இழுவைத் தொழிலாளர்கள் 24-11-85 ஞாயிற்றுக்கிழமை களத்தில் குதித்தனர். பொன்னாலை சனசமூகநிலையத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் பெண்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். ''களங்கண்ணி வலைகளை அகற்றிடுவோம்! தொழிலாளரே ஐக்கியப்படுங்கள்!, ஒடுக்குமுறைக்கெதிராகப் போரிடுவோம்! ஓங்கட்டும் வர்க்கப்புரட்சி!'' என்று முழக்கமிட்டவாறு முதலாவது பாலத்தில் உள்ள வலைகளை தொழிலாளர்கள் அகற்றிய போது களங்கண்ணி வலைக்காரர் பல இயக்கங்களுக்கு அறிவித்தனர். சில இயக்கங்கள் வந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். 5ம் பாலத்தில் இருந்த வலைகளை அகற்றிக் கொண்டிருந்த போது 'வலையை அகற்ற வேண்டாம். ஏறுங்கோடா'

(11-ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. மின்தறியாலையின் நிரந்தரப் பணியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து

# மறியல் போராட்டம்!

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்தின் கீழ் 1969ம் ஆண்டு முதல் மிகவும் லாபகரமாக இயங்கிவந்த மின்தறி ஆலையின் நிரந்தரப் பணியாளர்கள் 4-1-86 முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதோடு, ஆலையும் மூடப்பட்டுள்ளது. நீக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு சட்டரீதியாக கிடைக்கக் கூடிய நட்டஈடுகளையோ அல்லது சேவைக்காலத்தில் கழிக்கப்பட்ட கொடுப்பனவுகளையோ வழங்கப்படும் என்பதற்கான அறிவித்தலோ அல்லது உத்தரவாதமோ இல்லாத நிலையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் 4-1-86 முதல் அடையாள எதிர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுபற்றி விசாரித்தறிந்தபோது பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் தெரியவந்துள்ளன.

தொழிலாளர்களதும், பொதுமக்களினதும், தகவல்களின்படி 1971 முதல் இத்தொழிற்சாலை மிகுந்த இலாபகரமாக இயங்கி வந்துள்ளது. இக்காலத்திலேயே அகில இலங்கை கூட்டுறவாளர் போட்டியில் இந்தச் சங்கம் முதலிடத்தைப் பெற்றிருந்தது. இந்த ஆலையில் கிடைத்த இலாபத்தினால், தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றையும் உடை தயாரிக்கும் நிலையத்தையும் ஆரம்பித்தது. கிளைக் கடைகளின் பெரும்பாலான கட்டிடங்கள் சொந்தக் கட்டிடங்களாக மாறின. தற்போது எதுவித பாவனையுமற்று வெறுமனே இருக்கும் விளான் பண்ணைக் காணியும் இம் மின்தறி ஆலையின் இலாபத்தாலேயே வாங்கப்பட்டது. இதை விடவும் உடை தயாரிக்கும் நிலையத்தின் பணியாளர்களுக்கு சம்பளமும் இதனது இலாபத்திலிருந்தே வழங்கப்பட்டது.

பொது முகாமையாளரதும், நிர்வாகத்தினதும் படுமோசமான ஊழல் காரணமாக நூற்றுக்கணக்கான தொழிலாளர்களுடன் இயங்கிய இவ்வாலை நட்டத்தின் மேல் நட்டமெனக் கணக்கு காட்டப்பட்டு, 30 பேருடன் இயங்கும் ஆலையாக மாறி, இன்று மூடப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் நிர்வாகத்தின ஊழல்களை பட்டியல் போட்டுக் காட்டுகிறார்கள்.

1. நல்ல நிலையில் லாபகரமாக இயங்கிய 16 ஜப்பானிய இயந்திரங்கள் இருக்கும் போதே, இவ்வாலைக்குப் பயனற்ற 16 இந்திய இயந்திரங்களை, பொது முகாமையாளரின் நண்பரொருவரின் தனிப்பட்ட லாபத்திற்காக வங்கிக்கடன் பெற்று அவருடாக இறக்குமதி செய்தது. இவ்விந்திய இயந்திரங்களுக்கான வங்கிக்கடன் வட்டிக்கும் சேர்த்து தொழிலாளர்கள் உழைக்க வேண்டியிருந்தது.

2 மின்தறி ஆலைப் பாவிப்பிலிருந்து 4லட்ச ரூபா பெறுமதியான பொருட்களை பொது முகாமையாளர் தமது நண்பருக்கு 60,000 ரூபாவிற்கு விற்றார்.

3, 1976ல் நிகழ்ந்த கூட்டுறவாளர் தின விழாவிற்கு அளவு மீறிச் செலவு செய்தமை. (செய்ததாகக் கணக்குக் காட்டியது!)

4. பதனிடும் தொழிற்சாலைக்கு கொண்டு சென்ற இவ்வாலைக்குச் சொந்தமான 15,000/- பெறுமதியான துணிகள் காணமற் போய்விட்டதாகக் கூறி மோசடி செய்தமை.

5. நிர்வாகத்தை விமர்சனம் செய்யும் பணியாளர்களை இடைநிறுத்தம் செய்து மிரட்டுவது.

6. உறவினர் என்ற அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவது!

7. 13-9-85 அன்று கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்காக இலங்கை அரசு விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்திய அன்று வேலைக்கு வராதவர்களுக்கு குற்றப்பணம் அறவிட்டது.

8. ஆலை இயங்கிக் கொண்டிருந்த காலத்தில் நிர்வாகத்தில் இருந்த பொது முகாமையாளர் உட்பட மூவர் தாம் 'கங்கா ஜெயா' என்ற ஒரு கம்பனியை உருவாக்கி, அதிலிருந்து ஆலைக்கு இரசாயனப் பொருட்களை வாங்குகிறோம் என்ற பெயரில், இரசாயனப் பொருட்களுக்காக ஆலையில் உற்பத்தியான துணிகளை கிட்டத்தட்ட உற்பத்திச் செலவுடன் மாற்றீடு செய்து ஆலையை நட்டத்தில் ஓட வைத்து, 'கங்கா ஜெயா' மூலம் கொள்ளைலாபமடித்தது.

9. இதற்காக இம் மூவரும் இடைநிறுத்தம் செய்யப்பட்ட போதும். இப்போது முகாமையாளர், 6மாதத்தில் இவ்வாலையை லாபத்தில் ஓட்டுவேன் எனக் கூறி, பின்கதவால் வேலை செய்து திரும்பவும் பதவியை தேடிப்பிடித்தார். திரும்பவும் பொது முகாமையாளரின் நண்பரான தனிப்பட்ட முதலாளி ஒருவரின் ஆலோசனைப்படி 50,000 ரூபாவிற்கு உதிரிப் பாகங்களை வாங்கி மேலும் நட்டப்படுத்தினர்.

(பொருட்களை வாங்குதல் புதிய முதலீடுகளை ஆடுதல் என்பவற்றில் பெருமளவு 'அடி' கிடைக்கிறது!)

நட்டத்தில் ஓடினால் ராஜினாமாச் செய்வேன் என்ற இந்தப் பொதுமுகாமையாளர், உறுதிமொழிக்கு மாறாக தாம் தொழிற்சாலையை மூடி பற்றுவர்களின் வேலையை நிறுத்தியுள்ளார்.

10 தொழிலாளர்களிடம் மாதா மாதம் அறவிட்ட தொழிற்சங்க சந்தாப் பணத்தை தாய்ச் சங்கத்திற்கு அனுப்பாது மோசடி செய்தது!

11. மின்தறி ஆலையை மூடியபின் சில தளபாடங்களை 20 000 ரூபாவிற்கு ஏலத்தில் விற்றுள்ளார்கள். மேலும் பல சங்கச் சொத்துக்களை பொதுச்சபையின் அங்கீகாரமின்றியே விற்க முயற்சிகள் நடக்கிறது.

இத்தகைய படுமோசமான ஊழல் நிர்வாகத்தின் காரணமாக வேலை இழந்துள்ள தொழிலாளர்கள் கொதிப்படைந்துள்ளார்கள்.

ஊழல் நிர்வாகத்தை மாற்றும்படியும், தொழிற்சாலையை மீண்டும் இயக்கும்படியும் கோரி அவர்கள் தொடர்ந்து போராடி வருகிறாகள்

அவர்களுடைய போராட்டத்தை நாம் முழுமையாக ஆதரிப்பதுடன, இத்தொழிலாளர்களுக்கு அனைத்து மக்களையும் பூரணமான ஆதரவை வழங்குமாறு அறைகூவி அழைக்கிறோம!

## யார் பொறுப்பு?

எமது முன்னணிச் செய்தி 6வது இதழில் வெளியான புத்தூர் விவசாயிகளது நில உரிமைப போராட்டத்தின் வெற்றியானதுவறியகூலி விவசாயிகள் சங்கத்தின் தலைமையில் நடாத்தப்பட்டதாக எழுதப்பட்டிருந்த செய்தியையிட்டு பலர் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

ஆரம்பகாலத்தில் கிராமியதொழிலாளர் சங்கமும் கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்த கூட்டுக்குழுவே இப்பிரச்சனையை கையாண்டு வந்தது.

ஆனல் நாம் குறிப்பிட்ட நிலப்பறிப்பு இயக்கத்தில், தலைவெழுச்சியாக மக்களே ஈடுபட்டனர். தவருன கருத்துபட்ட எழுதியமைக்கு மன்னிக்குக.

விவசாகளின் குறிப்பிட்ட போராட்ட வெற்றிக்கு எந்தச் சங்கங்களும் அல்ல; புத்தூர் விவசாயிகளே பொறுப்பானவர்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரத்த சாட்சிகளே!

"...என் குதிரைக் குட்டியே, குதூகலப்பிரியனே
நீ எதற்காகச் சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டாய்,
எதற்காக என்னைத் தனியாக விட்டுச்சென்றாய்,
உன்னுடைய பிள்ளைப்பருவத்தை
இளமையை,
வருங்கால வாழ்வை
ஏன் துறந்துவிட்டாய் என்பதை
நான் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறாயா?
நீ விஷமக்காரனாக,
கூச்சல் போடும் வலிபனாக இருந்தாய்.
மக்களை எப்படி நீ நேசித்தாய் என்பதை
எல்லோரும் அறிந்துகொள்ளவில்லை.
எங்களுடைய துன்பத்தைப் பார்க்கப் பொறுமல்
நீ போய்விட்டாய்
மனிதர்கள் மனிதர்களாகவே இருக்க வேண்டும்,
மக்களுடைய உயிரோட்டமுள்ள மனித ஆன்மாவைப்
போர் ஊனப்படுத்திவிடக்கூடாது
நல்லியல்பையும் பரிவையும் அவர்களிடமிருந்து
நஞ்சூட்டி ஒழித்துவிடக் கூடாது,
என்று நீ பெரிதும் விரும்பினாய்.
இந்த விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு
நீ எல்லா வகையிலும் பாடுபட்டாய்.
உலகத்தில் நல்ல செயல்கள் மட்டுமே
நிலைத்து வாழ்கின்றன
மற்றவை எல்லாம் மறைந்துவிடுகின்றன.
உன்னுடைய நல்ல செயலும் நிலைத்து வாழ்கிறது..."

அன்னை வயல் நாவலில்
சிங்கிஸ் ஐத்மாத்தவ்

23-1-1986 அன்று தெல்லிப்பளை
யில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பாசிச
கூலிப்படையின் தாக்குதலின் போ
மாவை- கலட்டியை பிறப்பிடமாக
கொண்ட இளம் போராளி தோழ
இ.ராஜேந்திரன் படுகொலை செய்ய
பட்டார்.

தோழர் ராஜேந்திரன் எம
ஸ்தாபனத்தில் கடந்த மூன்று ஆண்
களாக தொடர்புற்றிருந்தார். ஸ்த
பனத்தில் அவர் தன்னாலியன்றள
அக்கறையுடனும் ஊக்கத்துடனு
செயற்பட்டார். தமிழீழத்தின் தேசி
விடுதலையை மக்கள் யுத்தப் பாை
யில் முன்னெடுப்பதை தமது கொ
கையாகக் கொண்டு எமது ஸ்தாபன
தில் இணைந்த தோழர் ராஜேந்திர
ஒரு வறிய கூலி உழைப்பாளர் குடு
பத்தைச் சேர்ந்தவர். எமது தேச
தின் விடுதலை தொழிலாள விவசா
கள் தலைமையிலான ஒருமக்கள் ஜ
நாயகக் குடியரசை நோக்கி வ
வேண்டும் என்ற ஆர்வம் கொண்
ருந்த தோழர் ராஜேந்திரன், இை
யிடையே வீரசாகச உணர்வின் பாதி
புக்கு உள்ளாவதுமுண்டு.

தோழர் ராஜேந்திரனின் மரண
தேசிய விடுதலையை நேசிக்கின்ற,
போராடுகின்ற மக்களுக்கு பேரிழ
பாகும்.

**தோழர் இ. ராஜேந்திரன்**
**(சுதன்)**



# உங்களுக்கு எங்கள் புரட்சிகர வணக்கங்கள்!

www.tamilarangam.net





## தோழர் குலம்

வறுமையிலும் துன்பத்திலும் உழலும் ஏழைகள் தமது ஏழ்மை நிலைக்கும் அடக்குமுறைக்குமான காரணத்தை புரிந்து கொள்ளும் போது கொதித்தெழுகின்றனர். தமது விடிவிற்கான வழி புதிய சன நாயகப் புரட்சியே என்று புரிந்து கொண்டதும் தமது கோபத்தை சுட்டெரிக்கும் தியாக மாற்றிக்கொண்டு புரட்சிகர உறுதியுடன் எந்த சக்தியாலும் அடக்க முடியாத வேகத்துடன் செயலாற்றுகின்றனர். நமது அன்பிற்குரிய தோழர் குலத்தினது உறுதியும் செயலூக்கமும் இவ்வடிப்படையிலேயே விருத்தியடைந்தன. அவர் தமது சமூகத்தில் நிலவிவரும் வறுமையையும் துன்பத்தையும் கண்டும் காணாதிருந்தவரல்ல. காரணங்களை அறிந்து கொண்டதும் புரட்சி புயலை வீசச் செய்ய மக்களுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டார். மக்களைப் புரட்சிப் போருக்கு தயாராக்க புதிய ஜனநாயகப் புரட்சியின் அரசியலை, மக்களது வாழ்க்கைத் துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான அரசியலை பிரச்சாரம் செய்ய தமக்கேயுரிய மக்களின் மொழியை பிரயோகிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார். நமது அன்பிற்குரியவரும், புரட்சிகர மக்களால் நேசிக்கப்பட்டவரும், மக்களது முன்னணிப் போராளியுமான தோழர் குலம் செப்டம்பர் நான்காம் திகதி (04-09-1985) எம்மிடம் இருந்து பிரிந்துவிட்டார்.

வறிய மீனவர் குடும்பத்தில் பிறந்தவரான தோழர் குலம் [த.செல்வராசா (யோகன்)] ஆரம்பக்கல்வியை மட்டுமே பெற்றிருந்தார். குடும்பத்தின் வாழ்நிலை, பொருளாதாரத்தேவை காரணமாக பாடசாலையை விட்டு வெளியேறி கடற்கரையிலும் மக்கள் மத்தியிலும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். உற்பத்தி நடவடிக்கையான உழைப்பிலும், சமூக வாழ்விலும் உற்சாகம் மிக்கவரான தோழர் புரட்சிகர உணர்வும், அரசியல் முன்முயற்சியும் தட்டியெழுப்பப்பட்டதும் தம்மை புனரமைத்துக் கொண்டு புரட்சிகரச் செயல்பாட்டில் அடங்காத வேகத்துடன் மேலும் மேலும் முன்சென்றார். தோழர் குலம் தமிழீழத்தில் நடைபெறும் சிறிலங்கா ராணுவத்தின் பாசிச வெறியாட்டத்தையும் அரச பயங்கரவாதத்தின் விளைவுகளையும் கண்டு கொதிப்படைந்த இளைஞர்களில் ஒருவர். சிறிலங்கா இராணுவத்தின் பாசிச வெறியாட்டத்திற்கு முடிவுகட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் குதிக்கவும், தம்மை அர்ப்பணிக்கவும் துணிந்தார். இவருடைய தொழில் சார்ந்த உறவுகளும், சமூக வாழ்நிலையும் காரணமாக தோழரிடம் குன்றாத மனவுறுதியும், அடக்கமுடியாத சாகச உணர்வும் இயல்பான குணங்களாக அமைந்து' இருந்தன. தமது வாழ்நிலை, சிந்தனைப்போக்கிற்கேற்ப துணிவும், தியாகவுணர்வும், வீரதீரமும் கொண்ட இளைஞர்களாலேயே தமிழீழத்தைப் பெற்றுவிட முடியும் என்று கருதினார். சமூக உறவில் தாழ்நிலையிலும், சுரண்டல் கொடுமைகளுக்கு ஆளாகியும் வந்த தமது கிராமமக்களது வாழ்நிலைத் துன்பத்திற்கான காரணத்தை அறிந்து சமூகமாற்றமே இதைத் தீர்க்கும் என்று புரிந்து கொண்டதும் புரட்சிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். தமிழீழப் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் எமது தேசிய விடுதலைப் போராட்டம் முன்வெடுக்கப்படும் போதுமட்டுமே, மக்களது உறுதியான வெற்றி சாத்தியம் என்றும் அதுவே ஒடுக்கப்படும் அனைத்து மக்கட்பிரிவினர்க்கும் விடுதலையை தர முடியும் என உணர்ந்து, மக்களைத் தட்டியெழுப்பி ஆட்சியதிகாரத்திற்காக போரிடுவதற்கான அறைகூவலை கிராமந்தோறும் பிரச்சாரம் செய்தார். மக்களுடன் தம்மைப் பிணைத்துக் கொள்வதில் தமிழீழ தேசியவிடுதலை முன்னணி முழுவதிலும் புரட்சியாளனுக்குரிய முன்மாதிரியாக விளங்கினார். மக்களுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டு புரட்சிக்காக தயார் செய்து வருங்காலத்தில் தம்மிடமிருந்த தனிமனித சாகச உணர்வை நீக்கி 'மக்களே, மக்கள் மட்டுமே தம்மை விடுவித்துக் கொள்ள முடியும்' என்ற சிந்தனைப் போக்கை தம்மில் வளர்த்துக் கொண்டார். மக்களது புரட்சிகர ஆற்றலில் நம்பிக்கைவைத்து, தமதுமன உறுதியையும், உற்சாகத்தையும், செயலூக்கத்தையும் புதிய ஜனநாயகப் புரட்சிக்காக அர்ப்பணித்துக் கொண்டார். தோழர் குலம் புரட்சிப்பாதையில் மக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு தம்மை புரட்சியாளனாக வளர்ந்து வந்தார்.

தோழர் குலம் தமது 24வது வயதில் செப்டம்பர் நான்காம் திகதி படகு விபத்தில் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டார். தோழர் குலம் புரட்சி மார்க்கத்தில் மக்களின் முன்னணிப் போராளியாக போராட்டத்தில் மக்கள் மத்தியில் தமது தியாக மரணத்தை அடையவில்லை. இதனால் மக்களது காதுகளுக்கு தோழர் குலத்தின் மரணம் ஒரு செய்தியாக எட்டுகிறது. தோழர் குலத்தின் மறைவு அவரது செயற்பாடுகளை, அவரது புரட்சிகர நினைவுகளை மனதில் மூட்டி பெரும் பாரமாக அழுத்துகிறது. அவரது புரட்சிப் பாதையை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறது. மக்களுக்கு போரினையே நிறுத்திடாமல் புதிய ஜனநாயகப் புரட்சியை நோக்கி முன்னேற அறைகூவல் விடுக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யாழ்ப்பாணத்தில் 15,000 பேரும்; ஊர்காவற்றுறையில் 2500 பேரும் பாசிசச் சட்டத்தை எதிர்த்து

# வரலாறுகாணாத மக்களின் பேரெழுச்சி!

## இன்னமும் தொடர்கிறது ஊர்வலங்கள்!

ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியுள்ள 100மீற்றர் பாதுகாப்பு வலயச் சட்டத்தை எதிர்த்து தமிழீழ மடங்கிலும் வரலாறு காணாவிதத்தில் மக்கள் கிளர்ந்து வருகிறார்கள். யாழ்நகரத்தில் 29-1-86 இல் நடைபெற்ற ஊர்வலத்தில் 15,000 பேர் கலந்து கொண்டார்கள். இதுவரை காலமும நடந்த ஊர்வலங்களிலும் இதுவே மிகப்பெரியது வழமை ஆக இவ்வாறான ஊர்வலங்களில் பாடசாலை மாணவர்களே பெருமளவில் கலந்து கொள்வார்கள். ஆனால் இம்முறை சுமார் 3000 பெண்களுடன் சாதாரண உழைப்பாளர்களே பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதே வேளை 28-1-86 செவ்வாய்கிழமை ஊர்காவற்துறையில் 2500 பேர் கலந்து கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சரவணை, புளியங்கூடல் ஊடாக காவலூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைவரை நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு கடைவர்த்தகர்கள் முதலானோர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதானமாக பின்வரும் கோஷங்களை கோஷித்துக் கொண்டு சென்றனர்.

பாதுகாப்பு வலயத்தை அகற்று!

பாசிச இராணுவத்தை வெளியேற்று!

பண்ணைப் பாலம் படுகொலைக் களமா!

பச்சைக் குழந்தையும் பயங்கரவாதியா!

கடற்படைத் தளத்தை அகற்று!

இனப்படுகொலையை நிறுத்து!

மக்கள் பாதை புரட்சிப் பாதை!

மாற்றுப் பாதை திருடர் பாதை!

பாட்டாளி வர்க்கத் தலைமையில் அணிதிரள்வோம்!

மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம்!

தீவுப்பகுதி மக்களுக்கு இந்தப் பாதுகாப்பு வலயச் சட்டத்தால் ஏற்பட்டுள்ள விசேசமான பயங்கர நிலையினால் கொதித்தெழுந்த மக்களை பல்வேறு வெகுசன இயக்கங்களின் இணைப்புக் குழு தலைமையேற்று இவ்வார்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியது.

மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுடன் நிறுத்திக் கொள்ளாது உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பதுடன் நிறுத்திக்கொள்ளாது அரச நிர்வாகத்தை நிலைகுலைய வைக்கும் விதத்தில் தமது போராட்டங்களை விஸ்தரிக்க வேண்டும். பரந்தளவிலான அரசியல் கிளர்ச்சியாக, இதை முழுத்தேச அளவில் வளர்த்தெடுக்க வேண்டும். சந்தர்ப்பவாத சரணடைவுவாத பாதைகளை நிராகரித்து, புரட்சிப் பாதையில் அணிதிரள வேண்டும்.

### திருத்தம்

2-ம் பக்க பக்கத் தலையங்கத்தில் மக்களை என்றிருப்பதை மக்கள் என்று திருத்தி வாசிக்கவும்.

### பாதுகாப்பு வலய ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதியை நோக்கிச் செல்ல உள்ள ஒரே வழியான பண்ணைப் பாலம், யாழ் கோட்டையில் உள்ள படுகொலை இராணுவத்தினரின் பலிபீடமாகி உள்ளது பஸ் பிரயாணிகள் ஒவ்வொருவரும் உயிரைக் கையில் பிடித்துவண்ணமே செல்ல வேண்டி உள்ளது. ஒரு இராணுவத்தானுக்குத் தோன்றினாலோ அல்லது அலுப்படித்தாலோ பண்ணைப்பாலத்தை இரத்தக்களரியாக்கி அழகு பார்க்க வாய்ப்பான சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், தமிழீழ மக்களின் பிண மலைகள் வீதியெங்கும் குவிந்துவிடும் அபாயம் விரைவில் உருவாகிவிடும்.

தொழிலாளர்களே! விவசாயிகளே! மாணவர்களே! பரந்துபட்ட பொது மக்களே! இந்த பாசிசச் சட்டத்தை எதிர்த்து கிளர்ந்தெழுங்கள். அரசாங்க அதபர்களே! அரச ஊழியர்களே! இந்தக் கொடுமுடிச் சட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் இறங்குங்கள். சட்டத்தை நீக்குமாறு அரசை நிர்ப்பந்தித்து எதிர்ப்புக் குரல் எழுப்புங்கள். அரச நிர்வாகத்தை ஓரளவுக்காவது இங்கு நிலைபெற வைத்துக் கொண்டிருக்கும் உங்கள் எதிர்ப்பின் மூலம் அரசை நிர்ப்பந்தியுங்கள்.

எதிரியின் போர்ப்பிரகடனம் ஒரு புறம், ஆயுதம் ஏந்திய இளைஞர்களின் தாக்குதல் ஒருபுறம், பரந்துபட்ட மக்கள் ஒரு புறமாகவும் உள்ள நிலைமையை மாற்றியமைக்க மக்கள் யுத்தப்பாதையில் ஐக்கியப்பட்டுப், போர்க்கொடி உயர்த்துவோம்! மக்களின் உயிர்வாழ்வுக்கு அச்சுறுத்தலான அரசின் அதிகாரங்களை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்து பதிலடி கொடுப்போம்!

ஆக்கிரமிப்பு யுத்தத்தை மக்கள் யுத்தத்தால் முறியடிப்போம்!

தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசை வென்றெடுப்போம்!

### அன்னையர் முன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் கொடுமைகளை முழுமையாக அம்பலப்படுத்தவும், அரச சிவில் நிர்வாகத்தை முற்று முழுதாக தமிழீழத்தில் ஸ்தம்பிக்கச் செய்யவும் தக்கவிதத்தில் அரசை நிர்ப்பந்திக்கும் முகமாக இத்தகைய மறியல் போராட்டங்களை மேலும் அதிகமாகவும், பரவலாகவும் விஸ்தரிக்க வேண்டும்.

யாழ் செயலக முன்பாக மட்டுமல்லாது, பிரதேசம் தோறுமுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், பாடசாலைகள் அரச அலுவலங்கள் அனைத்திலும் முற்றாக வேலைகளை ஸ்தம்பிக்கச் செய்யும் விதத்தில் ஒரு பரவலான மறியல் போராட்டத்தில் குதிக்குமாறு பரந்துபட்ட மக்களை அறைகூவி அழைக்கிறோம். தொழிலாளர்களை, அரச கூட்டுத்தாபன ஊழியர்களை ஆசிரியர்களை மாணவர்களை அனைவரையும் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் குதித்து பலத்த எதிர்ப்பை அரசுக்கு தெரிவிக்குமாறு அறைகூவி அழைக்கிறோம்.

தொழிலாளர்களே! ஊழியர்களே!

ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கான திட்டத்தை தீவிரமாக ஈடுபடுமாறும், செயல்படுத்துமாறும் தொழிற் சங்க கூட்டுறவை நிர்ப்பந்தியுங்கள்!

* அரச இராணுவத்தை வெளியேற்ற, உறுதியாக எதிர்த்துப் போராடுவோம்!
* அன்னையர் முன்னணியின் போராட்டத்திற்கு பூரண ஆதரவளிப்போம்!

### பிந்திய செய்தி

அன்னையர் முன்னணியின் இப் போராட்டம் கைவிடப்பட்டது. ஏன்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இயக்கப்படு கொலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நிலவுகின்றன. இவ் வர்க்கங்களினது நலன்களும் பார்வைகளும் வேறுபடுகின்றன. இங்கேயும் ஒடுக்கும் வர்க்கங்கள், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் இருக்கின்றன. தமிழ் நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளிய பிரிவினர் சமிழீழம் பிரிவதை தவிர்க்கமுடியாது ஆதரித்த போதும் இவர்கள் தமிழீழ மக்களை ஒடுக்கும் பிரிவினர் என்பதையோ, இன்று வரை தமிழீழத்தின் அரசியல் பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் இவர்களது ஆதிக்கமே நிலவுகிறது என்பதை மறந்து விடக்கூடாது இவர்கள் தமிழீழ விடுதலையை அடுத்து தொழிலாள விவசாயிகளையும் பரந்துபட மக்களையும் ஒடுக்கும் மக்கள் விரோதிகளாகும் பேராபத்து உடைய வர்கள் என்பதையோ, தமது சரணடைவு அதிகாரத்திற்காக விடுதலை இயக்கங்களை பயன் படுத்துவதில் தீவிரமாயிருப்பர் என்பதையோ நாம் மறந்து விடக் கூடாது.

எனவே சமூகத்தில் நிலவும் இந்த முரண்நிலை, விடுதலை இயக்கங்களில் பிரதிபலிப்பது தவிர்க்க முடியாததே. விடுதலை இயக்கங்களின் சமூக அடித்தளம் வர்க்க சார்பு நிலை என்பவற்றை ஒட்டி இம் முரண்பாடுகள் வெடிக்கின்றன. ஆயினும், இம் முரண்பாடுகள் ஆயுத முனையில் தீர்க்கப்பட வேண்டியவையல்ல ஸ்ரீலங்கா பாசிச இனவெறி யூ. என். பி அரசினதும், அதன் கூலிப்படையினதும் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு யுத்தப் பிரகடனத்தின் மத்தியில், இம் முரண்பாடுகளை பிரதானப்படுத்துவது விடுதலைப் போராட்டத்திற்கு நாசம் விளைவிக்கவே செய்யும்.

**எனவே அனைத்து விடுதலை ஸ்தாபனங்களும், அவை உண்மையாக மக்களை, மக்களின் விடுதலையை நேசிப்பவையாக இருந்தால், அவை உண்மையாகவே தேசபக்த போராளிகளை கொண்டதாக இருந்தால், தேச விரோத, ஏகாதிபத்திய அடிவருடிகளிடமிருந்து சுதந்திரமாக எமது தேசத்தை மீட்டெடுக்கும் தியாக வேள்வியில் குதிக்கும் மன உறுதியும் உற்சாகமுள்ள நேர்மையான விடுதலை இயக்கங்களாக இருந்தால், இயக்க முரண்பாடுகளுக்கெதிராக துப்பாக்கி தூக்குவதை நிறுத்த வேண்டும்! இயக்கத் தோழர்களை கொலை செய்வதை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். பொது எதிரியை நோக்கி துப்பாக்கிகளை திருப்பவேண்டும்.**

**இயக்கப் படுகொலைகளை எதிர்ப்போம்!**

**தொழிலாள விவசாயிகள் தலைமையிலான மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம்!**

## பொன்னுலை...

(6-ம் பக்க தொடர்ச்சி)

ஈனக் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகித்த ஒரு விடுதலை இயக்கத்தினர் அத் தொழிலாளர்களின் பலமிக்க எதிர்ப்பை சந்திக்க நேர்ந்தது தொழிலாளர்கள் தங்களுடைய போராட்டத்தைத் தொடர்ந்தனர், இப்போராட்டத்தின் முன்னணியில் நின்ற சிலதொழிலாளர்களோடு இவ் அமைப்பினர் கதைத்த போது முழுத் தொழிலாளரும் ''பேச்சுவார்த்தை வேண்டாம்! பட்டது போதும்!'' என வீராவேசமாக கோஷித்தனர்.

''நீங்கள் இருபகுதியினரும் ஒரு கிழமை இந்தக் கடலில் தொழில் செய்யாதையுங்கோ அதுக்கிடையில் நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறம்'' என்று இயக்கங்கள் வேண்டுகோள விடுத்து வலைகளைப் பொறுப்பேற்றனர். அதற்கு இழுவைத் தொழிலாளர்கள் ''நாங்கள் தொழில் செய்யாவிட்டால் அடுப்பெரியாது'' என்று கூறினர். தாங்கள் இரண்டு மூன்று நாட்களுள் இதனைத் தீர்த்து வைப்பதாகக் கூறிச் சென்றனர்.

அரச அலுவலகமொன்றுக்கு 30-11-85 அன்று தொழிலாளர்கள் அழைக்கப்பட்டனர். இரு இயக்கங்களின் பிரதிநிதிகளும் அரச அலுவலரும் டனம் பொருள் அபிவிருத்திச் சபையின் முன்னைநாள் தலைவரும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அமிர்தலிங்கம் வழங்கிய தீர்ப்பையே வழங்கினர். இம்முடிவை தொழிலாளர்கள் ஏற்க மறுத்த போது பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் முன்னைநாள் தலைவர் ''நாகரிகம் தெரியாத மனுசர் போல இருக்கிறியள்'' எனத் தனது அதிகாரத் தன்மையை காட்டினார்.

இம் முடிவை ஏற்க மறுத்துள்ள இழுவைத் தொழிலாளர்கள் தாம் தொடர்ந்தும் போராடுவதாக முடிவெடுத்துள்ளனர்.

பொன்னுலைத் தொழிலாளர்களின் இப்போராட்டத்திற்கு நாம் எமது உறுதியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குகிறோம். பொன்னுலைத் தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்தை பரந்துபட்ட மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டுவதும், போராட்டத்தை இடையில் கைவிடவோ, காட்டிக் கொடுக்கவோ தயாராக உள்ள பிற்போக்காளர்களை அம்பலப்படுத்துவதும், தமிழீழத்தின் புரட்சிப் பாதையில் பொன்னுலைத் தொழிலாளர்கள் ஐக்கியப்படுவதன் மூலமாகவுமே தமது அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**வெல்க பொன்னுலைத் தொழிலாளர் போராட்டம்!**

வீரம் தேவைப்படுகிற காலம் உண்மையாகவே வந்து விட்டது ஒவ்வொருவரும் உணர்ச்சியைத் தட்டி எழுப்புகிற, தெளிவான விஷயங்களை விரும்புகிறார்கள். அதாவது இன்று நடைமுறையிலுள்ள நமது வாழ்க்கைக்குப் பதிலாக இதைவிட உயர்ந்த மட்டத்திலுள்ள, சிறந்த, அழகான வாழ்க்கையை விரும்புகிறார்கள்.

**அன்ரன் செக்கோவுக்கு எழுதிய கடிதமொன்றில் மாக்ஸிம் கோர்க்கி**

www.tamilarangam.net



## வடபிரதேச கூட்டுக்குழுவிலுள்ள செயலற்ற திரிபுவாதத் தலைமைகளை அம்பலப்படுவோம்!

# புரட்சிகர தொழிலாளர் அணிகளைக் கட்டி எழுப்புவோம்!

ஸ்ரீலங்கா பாசிச இனவெறி யூ.என்.பி. அரசின் இன அழித்தொழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்து, தேசமடங்கிலும் மக்கள் கிளர்ந்தெழுந்து வருகிறார்கள். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் முயற்சிகளில் வடபிரதேச கூட்டுக் குழு (J.C.T.U.) ஈடுபட்டு வருவதாக அறிகிறோம்.

இக் கூட்டுக் குழுவில் 13 தொழிற் சங்கள் அங்கம் வகிக்கின்ற போதிலும் அவற்றில் சிலவே தொழிற்படுகின்றன. இன்னும் சில தமது உறவை பெயரளவில் மாத்திரம் வைத்துக் கொண்டு தனிப்பட்ட முறையில் சுயலாபத்திற்காக வெளியே செயற்படுகின்றன. இன்னும் சிலர் அங்கத்தவர்களே இல்லாத சங்கங்களின் பிரதிநிதிகளாக உள்ளனர். இந்த நிலையில் கூட்டுக்குழு பரந்துபட்ட தொழிலாளர் பலமோ, மக்கள் தொடர்போ அற்ற நிலையில் அதன் செயற்பாடுகள் இழுபறி நிலையில் இருப்பது தவிர்க்க இயலாததே. ஆனாலும் இதில் அங்கம் வகிக்கும் பிற்போக்குவாத, திரிபுவாத, சந்தர்ப்பவாதத் தலைமைகளே இதற்கு முக்கியகாரணமாகும். இவையே இதில் அங்கம் வகிக்கும் முற்போக்கு சக்திகள் இன்றைய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உள்ள பெருந்தடைக் கற்களாகும்.

தொழிலாளர் வர்க்கத்தை வெற்றுப் பொருளாதார வாத, தொழிற்சங்க வாத சகதிக்குள் மூழ்கடித்து, ஆளும் வர்க்கங்களுக்கு சாமரம் வீசிய இந்தப் பிற்போக்குத் தொழிற்சங்கள், இன்று தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்களைக் கூட முன்னெடுக்காது சீரழிந்து போயுள்ளன. தொழிலாள வர்க்கத்தைப் பொருளாதார வாத சகதியிலிருந்து மீட்டெடுக்கவும், புரட்சிகர அரசியல் போராட்டங்களில் முன்னிறுத்தவும் தடையாயுள்ள இந்த திரிபுவாத, சந்தர்ப்பவாத தலைமைகளைத் தூக்கியெறியவதும், புரட்சிகர தொழிலாளர் அணிகளை உருவாக்குவதற்கான பணிகளை தீவிரமாக செய்வதும் மிக மிக அவசியமாகும்.

ஆயினும் இத் திரிபுவாத தலைமைகளை முறியடித்து இன்றைய கட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஏனைய வெகுஜன ஸ்தாபனங்களோடு கூட்டுச் சேர்ந்து பொதுப் போராட்டத்தில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்ற நோக்குடன் ஒரு சில முற்போக்கு சக்திகள் முயல்வது பாராட்டத்தக்க ஒரு முயற்சியாகும்.

❋ பிற்போக்குவாத தலைமையை நிராகரிப்போம்.!

❋ திரிபுவாதிகளை, சந்தர்ப்பவாதிகளை அம்பலப்படுத்துவோம்!

❋ பாசிச அரசின் ஒடுக்குமுறைக்கெதிராக தொழிலாளர்களே! விவசாயிகளே! ஒன்றுபட்டு போராடுவோம்!

# ஒரு அறிவித்தல்

வசாவிளான் 3ம் வட்டத்தில் இருக்கும் இ.செல்லநாயகம் என்பவர் யாழ்ப்பாணத்தில் எமது ஸ்தாபனப் பெயரைப் பயன்படுத்தி நிதி சேகரிப்பில் ஈடுபட்ட போது TELO தோழர்களால் கைதுசெய்யப்பட்டு எமது ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டார். ஸ்தாபனத்தின் தோழர்கள் இவரை விசாரித்தபொழுது தான் இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் என்றும் தன்னைத்திருத்திக் கொள்வதாகவும் கூறி சடிதம் ஒன்றை கையளித்ததன் பேரில் அவர் மன்னிக்கப்பட்டு விடப்பட்டார்.

ஆனால் இந்த சம்பவத்திற்கு பின்னரும் இவர் புன்னாலைக்கட்டுவன் உரும்பிராய் போன்ற இடங்களில் மோட்டார் சைக்கிள் கடத்துவதிலும் நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டுள்ளார். ஸ்தாபன ரீதியாக இவருக்கு நடவடிக்கை எடுக்கும் அதே வேளையில் மக்களை, இவரையிட்டு விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எமது உறுப்பினர்கள் நிதிசேகரிப்பிற்கோ அல்லது வேறு தேவைகளுக்கோ மக்களை அணுகும் போது எமது இயக்கத்தின் அடையாள அட்டையை கொண்டுவருவார்கள். அடையாள அட்டையின்றி ஸ்தாபனப்பெயரைப் பயன்படுத்தி யாரும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால், மக்களை அவர்களை இனங்கண்டு அம்பலப்படுத்துமாறும் எமது ஸ்தாபனத்திடம் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

★ ★ ★

### நாடற்றவர்...

(5-ம் பக்க தொடர்ச்சி)

முறைப்படுத்துமா என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்திய அரசின் நெருக்கடியை சமாளிக்கவும், தமிழீழ தேசிய ஒடுக்குமுறை காரணமாக விகாரமடைந்துவிட்ட தமது பாசிச முகத்திற்கு ஒரு ஜனநாயக முத்திரை அணியவும் செய்யப்பட்ட ஒரு செயலே இந்த பிரஜா உரிமை வழங்கலாகும்.

தோட்டத் தொழிலாளர்கள் தம்மை ஸ்தாபனரீதியாக அணிதிரட்டிக் கொள்வதும், பிற்போக்கு யூ என் பி அரசைத் தகர்த்தெறிகிற புரட்சிப் போராட்டத்தில் அணிவகுத்துச் செல்வதும் மட்டுமே தொழிலாளர்கள் தமது விடுதலையைப் பெற்றுக் கொள்ள உள்ள ஒரே வழியாகும்.

எனவே தோட்டத் தொழிலாளர்களே!

★ தொழிற்சங்கவாத, தொழிலாள வர்க்க விரோத இ.தொ.கா தலைமையை நிராகரிப்போம்!

★ சந்தர்ப்பவாத சரணடைவுவாத பேரம் பேசலை நிராகரிப்போம்!!

❋ ஆயுதமேந்திய புரட்சிகர மக்கள் யுத்தத்தை தலைமையேற்று நடாத்தி யூஎன் பி ஆட்சியாளர்களை தூக்கி எறிவோம்!!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தருமபுரத்தில் கூலி விவசாயி படுகொலை! நியாயம் கேட்ட மக்கள் மீது வெறியாட்டம்!

தருமபுரத்தில் ஒரு கூலிவிவசாயி இயக்கமொன்றினால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பிணமாக திரும்பி ஒப்படைக்கப்பட்டார். அடுத்தநாள் கொலை செய்யப்பட்டதற்கான காரணத்தைக் கேட்டு பெருந்திரளான கூலி, வறிய விவசாயிகளும் அயலூர் மக்களும் வீதி மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர். இதற்கு ஒரு சில நாட்களின் பின்னர் சம்பந்தப்பட்ட இயக்கத்தினர் மறியல் போராட்டத்தை முன்னணியில் நின்று நடாத்திய விவசாயிகளை மோசமாகத் தாக்கினர். இதில் பலர் காயங்களுக்கும் உள்ளாயினர். இதன் பின் தாக்கப்பட்ட ஒருவர் இராணுவத்தினரிடம் சரணடைந்து பல இயக்கப் போராளிகளை காட்டிக்கொடுத்து வருகிறார்.

**போராளிகளே!**

தேசிய விடுதலைப் போராட்டத்தை நிச்சயமான வெற்றிக்கு இட்டுச் செல்வதில் தலைமை வகிக்கக் கூடியவர்கள் இந்த வறிய, கூலி விவசாயிகளே; இவர்கள் மீது தாக்குதல் தொடுப்பது என்பது தேசிய விடுதலைக்கு துரோகமிழைப்பதாகும். மக்களே வரலாற்றை உருவாக்கும் சக்திகளாவர். தனி நபர்களோ அன்றி குழுக்களோ அன்று. இன்று ஸ்ரீலங்கா பாசிச அரசின் ஒடுக்கு முறைக் கெதிராக முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நாம், இவ் ஒடுக்கு முறைக்கு உள்ளாகிவரும் அம்மக்களை சார்ந்து அவர்களை தட்டியெழுப்பி மக்கள் யுத்தம் ஒன்றினை நடாத்துவதன் மூலமே இவ் ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை அடைய முடியும். மக்களுக்கு விடுதலையை மேற்கூறிய எமது செயற்பாடுகள் பெற்றுக் கொடுத்து விடமாட்டாது. மாறாகமக்களிடமிருந்து எம்மை அந்நியப்படவே செய்யும். சக இயக்கங்களே, போராளிகளே, இன்றைய நெருக்கடிக்கு (தேசிய விடுதலைக்கு) எம்மக்களை சார்ந்து நின்று ஒரு மக்கள் யுத்தத்தினை நடாத்துவோம். இனிமேல் மக்கள் விரோத செயல்களில் ஈடுபடமாட்டோம் என உறுதி பூண்போம்!

வெல்க வறிய, கூலி விவசாயிகள் போராட்டம்!

வெல்க புதிய ஜனநாயகப் புரட்சி!

அமைப்போம் தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசு!

## ஆயுதங்கள் முக்கியமானவைதான்; ஆனால் தீர்க்கமானவை அல்ல!

சீனாவின் நிலைமையை எடுத்துக்கொள்வோம். நாம் தினையிலும் சாதாரண துப்பாக்கிகளிலும் மட்டுமே தங்கியிருகக வேண்டியுள்ளது. ஆனால் தினையும் துப்பாக்கிகளும் சியாங்கை—ஷேக்கின் விமானங்கள், டாங்கிகளிலும் பார்க்கப் பலமுடையவை என்பதை வரலாறு நிரூபிக்கும். சீன மக்கள் இன்னமும் பல கஷ்டங்களை எதிர்நோக்கியிருந்த போதிலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சீனப் பிற்போக்கு வாதிகளினதும் கூட்டுத் தாக்குதல்களால் நீண்ட காலம் துன்ப துயரங்களை அனுபவிக்க வேண்டியேற்பட்டாலும் இந்தப் பிற்போக்கு வாதிகளைத் தோற்கடித்து, நாம் வாகை சூடும் நாள் நிச்சயம் வரும் காரணம், பிற்போக்கு வாதிகள் பிற்போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்; நாம் முற்போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதைத் தவிர வேறில்லை.

-மாஓ-

[அமெரிக்க நிருபர் அன்னா லூயிஸ்ஷ்ருக்கு அளித்த பேட்டியில்]

## கூட்டணியின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. ஒடுக்கும் இனமும் ஒடுக்கப்படும் இனமும் சம உரிமை பெற வேண்டுமானால் இரு இனங்களிடையேயும் அமைதி நிலவ வேண்டுமானால் ஒடுக்கப்படும் இனம் தனது சுய நிர்ணய உரிமையை கொண்டிருக்க அனுமதிக்கப்பட வேண்டும். எனவே தான், அந்த விதத்தில் அசமயாத இந்த 'சுயாட்சி' தமிழீழத்தின் நிலப்பிரபுத்துவ தரகு அதிகார வர்க்கங்களுக்கு வாய்ப்பளிக்கிற, பரந்துபட்ட தமிழீழ மக்களுக்கு முதுகிலே குத்துகிற துரோகத்தனமான திட்டம் என நாம் கருதுகிறோம்.

தமிழீழ மக்களின் பிரச்சினையை இந்த எத்தகைய (சமரச சரணாகதி மூலமாகப் பெறப்படும்) சுயாட்சிகளும் தீர்த்துவிட முடியாதென்பதற்கு நேர் சாட்சியாக இந்தியாவிலுள்ள தமிழ் தேசிய இனமுள்ளிட்ட பலதேசிய இனங்கள் உள்ளன.

தமிழீழ மக்கள் தேசிய ஒடுக்கு முறையில் இருந்து விடுபட்டு ஒரு மக்கள் சனநாயக குடியரசை (புதிய சனநாயக அரசு) அமைக்கின்ற போது மட்டுமே தான் தமிழீழ மக்கள் தலை நிமிர்ந்து நிற்கவும், சனநாயக வாழ்வை அனுபவிக்கவும் முடியும்.

எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தனமான திட்டத்தை நிராகரிப்போம்!

தமிழீழ மக்கள் சனநாயக குடியரசை வென்றெடுக்க தொழிலாள விவசாயிகள் தலைமையிலான மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம்!

### திருத்தம்

கடந்த இதழுக்கு முந்திய இதழில் (இதழ் 5) இளைஞர் இயக்கம் பற்றிய கட்டுரையொன்று 'மாஓ' எழுதியதாக வெளிவந்திருந்தது. அக்கட்டுரை சூ. என். லாய் எழுதிய கட்டுரையாகும். தவறு நேர்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆயுதக் குறைப்பு பேச்சுவார்த்தை ஒரு அப்பட்டமான கபட நாடகமே!

## ஏகாதிபத்தியங்களை தூக்கி வீச புரட்சிப் பாதையில் அணிதிரள்வோம்!

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில் இன்னும் 15 ஆண்டுகளில் அணு ஆயுத உற்பத்தியை முற்றாக நிறுத்திவிடுவது என்று சோவியத் அறிவித்துள்ளது.

இதை வரவேற்றுப் பேசிய அமெரிக்கா ஆயினும் தாம் இதைச் செய்யப்போவதாக அதற்கு அர்த்தமில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டி போட்டுக் கொண்டு அணு ஆயுதம் பற்றி பேசவும் எழுதவும் செய்த போதும், உற்பத்தி மட்டும் என்னவோ இன்னும் இன்னும் வேகமாகவே வளர்ந்து வருகிறது.

ஒருநாளுக்கு 3000சதுர அடி பரப்பு வீதம் கம்யூனிசம் பரவுகிறது என்று அமெரிக்கப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதுவும், முன்பொருமுறை றேகன், கம்யூனிசம் ஒரு பிசாசு, அது உலகை மெல்ல மெல்ல விழுங்கி வருகிறது என்றும், சோவியத்யூனியனை உலக வரைபடத்திலிருந்து அகற்றுவதற்கான பத்திரத்தில் கையொப்பமிட்டுவிட்டு வருகிறேன்' என்று கூறியதுவும் ஆயுதக்குறைப்பு மாநாடுகள் நடைபெறும் நேரமெல்லாம் அடிக்கடி நினைவுக்கு வரவே செய்யும்.

கடந்த நவப்பர் 19ம் திகதி இரு வல்லரசு நாடுகளின் தலைவர்களான கொர்பச்சோவும் றேகனும் ஜெனிவாவில் நடந்த உச்சிமாநாட்டில் சந்தித்துக் கொண்டனர். சந்திப்புக்கு முன்னர் சோவியத்-அமெரிக்க உறவுகளை மேம்படுத்த ஆக்கபூர்வமான முறையில் பேச்சுவார்த்தைகளை தொடங்கவேண்டுமென றேகன் கூறிக் கொண்டார். இருவரது நோக்கமும், அணு ஆயுதப் போட்டியை முடிவுக்கு கொண்டு வருவதாகவே இருக்கிறது என அனைத்து முதலாளித்துவப் பத்திரிகைகளும் எழுதிய போதும், உண்மை என்னவோ, எதிராளியை எப்படி மேவுவது என்பதுதான் இருவருடைய நோக்கமுமாக இருந்தது.

இந்த ஆயுதக் குறைப்பு பேச்சுவார்த்தைகட்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

1955ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும், ருஷிய தலைவர் குருச்சேவும முதன்முறையாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து 1959, 1960, 1961, 1971, 1972 வரை பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டே இருந்தன. 1972ல் நிக்சனும் பிரஸ்நேவும உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டனர். 1972இல் இருந்து தொடர்ந்து 1973, 74, 75 வரை இது நீண்டது. இச் சந்திப்புகள் SALT I, SALT II என அழைக்கப்பட்டன (Stratagic Arms Limitation Talks) 1979க்குப் பின் ஆறு ஆண்டுகள் இடைவெளிக்கு பின் மீண்டும் கடந்த நவப்பரில் இவை தொடங்கியுள்ளன. இம்முறை றேகனும் கொபர்ச்சோவும்.

இந்த உச்சிமாநாடு முக்கியமாக ஆயுதக் கட்டுப்பாடு, மனித அடிப்படை உரிமைகள், பிராந்தியப் பூசல்கள் பரஸ்பர உறவுகள் சம்பந்தமான ஆராய்விற்கே கூடியதாக பேசப்பட்டது. இப் பேச்சுவார்த்தைகள் மூலம் உலக சமாதானமும் ஐக்கியமும் ஏற்படப் போவதாக பரவலாக பிரச்சாரம் செய்த போதிலும், புரட்சிகர மக்கட்பிரிவினர் அவற்றின் ஏமாற்றுத் தனங்களை மிகவும் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

அமெரிக்கா, ருஷியா என்ற இரு பெரும் ஏகாதிபத்தியங்களும், உலக ஆதிக்கத்தை தமது ஏதேச்சதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்காக போட்டி போட்டுக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. உலகெங்கும் வெடித்துக் கிளம்புகிற புரட்சிப் போர்களை, தேசிய விடுதலைப் போராட்டங்களையும் தனது கம்யூனிஸ்ட் முகமூடியுடன் நண்பனாக அணுகி தனக்கு சாதகமாக்கி அந்த நாட்டு மக்களின் முதுகிலே குத்தி ஆக்கிரமிக்கும் நடவடிக்கையை சோவியத் செய்து வருகிறது. குருச்சேவின் திரிபுவாத போலிக் கம்யூனிச ஆட்சிக்குப் பின், வேகமாக ஏகாதிபத்தியப் பாதையில் வளர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குப் போட்டியாக உலக மக்களை ஏப்பம் விட துடிக்கும் சமூக ஏகாதிபத்தியமாக ருஷியா உருவாகியுள்ளது. அமெரிக்காவோ உலக நாடுகளின் புரட்சிகர மக்களின் குரல்களை நசுக்கியும், ஈவிரக்கமற்ற படுகொலைகளை செய்தும் வருகிறது. கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டு உலகப் பிற்போக்காளர்களை கையில் போட்டுக் கொண்டு உலக மக்களை சுரண்டிக் கொழுத்து வருகிறது. உலக மக்களிடம் தொடர்ச்சியாக மரண அடி வாங்கிய போதும், இன்னும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தைக் காப்பாற்ற பாசிச யுத்தங்களை தொடர்வித்து வருகிறது. அமெரிக்க படுகொலைவாதிகளுக்கும் ருஷிய சமூக ஏகாதிபத்திய வாதிகட்குமான உலகைப் பங்கு போட்டுக் கொள்வதற்கான போட்டியில், ஒரு மூன்றும் உலக யுத்தம் வெடிப்பதற்கான ஆபத்துள்ளதால் உலக மக்கள் இவற்றை வேகமாக எதிர்த்து வருகிறார்கள். இவற்றின் பிடியிலிருந்து தம்மை சுதந்திரமாக்கிக்கொள்ள தீவிரமாகப்போராடி வருகிறார்கள்.

நாடுகளைப் பிடிக்கும் போக்கில் (தமது சந்தைகளையும், சுரண்டலையும் விஸ்தரிக்கும் நோக்கில்) முன்னணியில் நிற்கும் இரு பெரும் வல்லரசுகளும் போட்டியிட்டுக் கொண்டு ஆயுத →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உற்பத்தியில் இறங்கின. இன்று சோவியத் யூனியன் நடுத்தர வீச்சு ஏவுகணைகளிலும், இரசாயன ஆயுதங்களிலும் மிக முன்னேற்றமடைந்துள்ளது. இதனைக் கண்டு அமெரிக்கா 'சோவியத் ஏவுகணைகளையும் இரசாயன ஆயுதங்களையும் பாவித்து வருகிறது' என குற்றம் சாட்டுகிறது. ஆனால் அமெரிக்காவோ, விண்வெளியில் வைத்திருக்கும் நட்சத்திரப் போர் (Star War) முறையில் மிக முன்னேறியுள்ளது. இதைச் சோவியத் குற்றம் சாட்டுகிறது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியபடி கண்ட முடிவு ஆயுதக் குவிப்பே!

சோவியத் தான் முதலாவதாக அணுவாயுதத்தை உபயோகிப்பதில்லை என ஒப்பந்தமொன்று செய்துள்ளது. ஆனால் அமெரிக்காவோ இதை செய்யத் தயாராகவில்லை அது விண்வெளியில் தனது பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிந்த பின் தனது தாக்குதலை தொடரக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்போர் முறைகள் மிக நவீன முறையில் (Computer System) இயக்கப் படுகின்றன. மனிதர்கள் சம்பந்தப்படாமலே இவை நடந்து விடக் கூடியனவையாக உள்ளன.

உலக நாடுகளில் ஏற்பட்டு வரும் பொருளாதார நெருக்கடிகள, தவிர்க்க முடியாமல் அந் நாடுகளில் வெடித்துக் கிளம்பும் புரட்சி யுத்தங்களை தூண்டிவிடுகின்றன. ஏகாதிபத்தியங்கள் இவற்றை அடக்க மேலும் மேலும் ஆயுதங்களை குவிக்கின்றன. இதுவும் ஏகாதிபத்தியங்களின் ஈவிரக்கமற்ற சுரண்டலால் மேலும் பொருளாதார ரீதியான பின்னடைவை உருவாக்குகிறது. மேலும் மேலும் புரட்சி தவிர்க்கமுடியாததாக உருவாகி வருகிறது.

எழுந்து வரும் தேசிய விடுதலைப் போராட்டங்கள், புரட்சிப் போர்களை கண்டு அஞ்சி நடுங்கும் ஏகாதிபத்தியங்கள் முழுமூச்சாக அவற்றை அடக்க நினைத்த போதும், அவைகளை மீறி, அவற்றை தூக்கி எறியும் விதத்தில் உலகப் புரட்சிகர சக்திகள் வேகமாக எழுந்து வருகிறார்கள்.

உலகளவில் மூன்றாம் மண்டல நாடுகளும், மக்களும் நடாத்தும் எதிர்ப்புக்களின் தவிர்க்கமுடியாத விளைவாகவே இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இவை உலக அரங்கில் எழுந்து வரும் எதிர்ப்புணர்வை சமாளிக்க ஆடப்படும் கபட நாடகங்களே உலக மக்களை ஏமாற்றவும், தமது சுரண்டலை மேலும் வளர்க்கவும் நடாத்தப்படும் இந்த வஞ்சகத்தனமான பேச்சுவார்த்தைகளால் உலக மக்கள் ஏமாறுவதற்கு இன்னும் தயாராக இல்லை. ஏகாதிபத்திய நாடுகளிடையே யுத்தங்கள தவிர்க்கமுடியாதவை என்பதனால் இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம் கூறப்படும் எத்தகைய முடிவுகளும உலக மக்களை திருப்திபடுத்தாமல் தோல்வியுறுகின்றன; மாறாக, இவை மூலம் இவ் ஏகாதிபத்தியங்கள் மேலும் மேலும் உலக மக்கள் முன் அம்பலமாகி வருகின்றன.

1955-ம் ஆண்டு தொடங்கி கடந்த 20 வருடங்களாக நடக்கும் இப் பேச்சுவார்த்தைகள் எவ்வித பயனுமின்றி தொடர்கிறது மேலும், மேலும் உலக மக்களை நசுக்குவது தொடர்கிறது.

ஏகாதிபத்தியங்களை தூக்கி எறியவும், மனிதப் படுகொலைகளை நிறுத்தவும் உலக சோஷலிச புரட்சியை நோக்கி அனைத்து உலக மக்களும் அணிதிரள வேண்டும். புரட்சி யுத்தத்திலேயே இந்த எதிரிகளை தூக்கி எறியமுடியும்.

எமது நாட்டில், இவ்வேகாதிபத்திய கைக்கூலிகளையும், அதன் அடிவருடி ஆட்சியாளர்களையும் தூக்கி எறிந்து, உலக மக்களின் புரட்சிகர சோஷலிசப் பாதையில் அணி திரள்வோம்!

ஏகாதிபத்தியங்கள் அழியட்டும்!

உலக சோஷலிசப் புரட்சி வெல்லட்டும்!

## கசிப்பு என்ற...

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை ஸ்தாபனம் ஒன்று ஊர்வலத்தில் தாக்கப்பட்டவர்களை ''கசிப்பு ஒழிப்புக்கு எதிராக ஊர்வலம் வந்தவர்கள்'' என்ற பொய்யான குற்றச்சாட்டின் பேரில் வாகனத்தில் கடத்திச் சென்றது. பின்னர் எந்தவித நியாயமான விசாரணையும் செய்யாது, கைது செய்தவர்களை விடுவித்து பிரச்சினையை கைவிட்டது. ஊர்வலத்தில் கடுமையாக தாக்கப்பட்ட இருவர் ஒரிரு வாரங்களாக தொழில் ஏதும் செய்யமுடியாது உடல் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

கடுமையான உடலுழைப்பில் ஈடுபடுவதன் மூலம் கஷ்ட சீவனம் செய்யும் இந்த தொழிலாளர்கள், தொடர்ந்தும் அடக்கப்படும் நிலையிலேயே இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் செய்யப்படும் இத்தகைய அச்சுறுத்தல், அடாவடித்தன நடவடிக்கைகளை அனைத்து விடுதலை ஸ்தாபனங்களும் உடனடியாக நிறுத்த வேண்டும். உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் கோடாலிக் காட்டு கிராம மக்களின் குடும்பங்கள் பட்டினியால் வாடுவது, அவர்களை தொடர்ந்து அடக்க வாய்ப்பாக இருந்து வருகிறது.

இறுதியாக, கிராம மக்கள், தமது அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணமான கசிப்பை உற்பத்தி செய்வதை முற்றாக நிறுத்தினர்.

இந்தக் கசிப்பு உற்பத்தி ஒரு சமூகத் தீமையென்று தெரிந்தும், ஒரு பணம் தேடும் உற்பத்தியாகவோ இத்தொழிலாளர்களால் செய்யப்படுவதில்லை. குறைந்த கூலியில் குறைந்தளவே வேலை கிடைக்கிற நிலையில் தமக்கு தெரிந்த இந்த ஒரே வகையான வழிமுறையை இந்தத் தொழிலாளர்கள் கையாழ்வது. தமது குடும்பங்களின் பட்டினியைப் போக்கும் நோக்கிலேயே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

உண்மையில் தொழிலாளர்கள் பெறுகின்ற மிகக் குறைவான கூலி காரணமாக, குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் உழைத்தும் (வாரத்தில் 2, 3 நாட்களே வேலை கிடைக்கிறது) தொடர்ந்தும் பட்டினியும், வறுமையும் நிலவி வருகிறது. தொழிலாளர்கள் தம்மை ஸ்தாபனப்படுத்திக் கொள்ளவும், தமது கூலியை அதிகமாக பெற்றுக்கொள்வதன் மூலம்

(16-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடந்தது என்ன?

# விசாரணையா? தண்டனையா?

### துண்டுப்பிரசுரம் மூலம் புதிய ஜனநாயக மாணவர் சங்கம் (NDSU) விளக்கம்

அண்மையில் ஸ்ரீலங்கா அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயச் சட்டத்திற்கு எதிராக பரந்துபட்ட வெகுசனங்களை கிளர்ந்தெழுமாறு கோரி புதிய ஜனநாயக மாணவர் சங்கம் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இத்துண்டுப் பிரசுரத்தை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தி மகாவித்தியாலத்தில் NDSU உறுப்பினர்கள் விநியோகித்த போது அதனை தடுக்க முயன்ற ஆசிரியர் ஒருவருக்கும் அவ்வுறுப்பினருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பில் முடிந்தது. இது பற்றி ஒரு துண்டு பிரசுரத்தை N.D.S.U வெளியிட்டுள்ளது.

இப்பிரசுரத்தை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம ம வி இல் வழங்கச் சென்ற எமது தோழர்கள் நிர்வாகத்திடம் அனுமதி கோரியபோது அனுமதி மறுக்கப்பட்டதால் அதை மீறி பிரசுரத்தை வழங்கினார்கள். இவ்வாறு ஒரு வகுப்பில் பிரசுரம் வழங்கப்பட்ட போது வகுப்பு ஆசிரியர் தனது அனுமதி கோரப்படவில்லையென்று எமது தோழரை ஏசியுள்ளார். ஆனால் அந்தத் தோழர் தான் வகுப்பில் நுழைய முன் அனுமதி கோரியதாகச் சொன்ன போது ஆசிரியர் வகுப்பைவிட்டு வெளியே போ என்று திரும்பவும் ஏசினார். பின்னர் ஆசிரியர் எமது தோழரை கழுத்துச் சேட்டில் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு சென்ற போது இருவரிடையிலும் வாக்குவாதம் ஏற்பட்டு ஆசிரியர் தாக்கியதால் எமது தோழரும் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்த வரையில் எமது தோழர் கல்லூரியின் கட்டுப்பாட்டை மீறியதும், ஆசிரியரைத் தாக்கியதும் குற்றமென்றே நாம் எம்மைச் சுய விமர்சனம் செய்வதுடன் ஆசிரியருக்கு ஏற்பட்ட மனத்தாங்கலுக்காக மிகவும் மனவருத்தப்படுகின்றோம்.

இச் சம்பவத்தால் ஆத்திரமுற்று மாணவர்கள் தன்னெழுச்சியாகக்கிளர்ந்தெழுந்தபோதும் எமது தோழரை கண்ணியமாகவே விசாரணை செய்துள்ளார்கள். ஆனால் நிர்வாகமோ கையாலாகாத் தனமாக செயலிழந்து நின்றதைக் காணக்கூடியதாகவிருந்தது. பின் மாணவர் முன்னிலையில் எமது தோழர் நிறுத்தப்பட்டு மன்னிப்புக் கோருமாறு மாணவர் மன்றத்தால் பணிக்கப்பட்டார்.

அப்போது அவரதுகுற்றங்கள் அதிபரால் மாணவர்களுக்கு முன்வைக்கப்பட்டது. அக் குற்றங்களை ஏற்றுக் கொண்டு எமது தோழர் தனதுகருத்தையும் முன்வைத்து மன்னிப்புக் கோரும் நோக்கத்துடன் மாணவர்களை விழித்து பேச முயன்ற போது அவர் தனது நியாயத்தைக் கூறிவிடுவார் எனவோ அல்லது தமது அதிகாரத்துவ அடக்குமுறையை அமுல்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடனோ சில பிற்போக்கு சக்திகளால் தடுக்கப்பட்டார். இச் சுழப்பத்தின் மத்தியில் மாணவர்களால் கல்லூரிக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டு மின்கம்பத்தில் பிணைக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டார். இங்கே மாணவர்களின் தன்னெழுச்சியை ஒரு சில பிற்போக்குச் சக்திகள் தமக்குச்சாதகமாகவே பயன்படுத்தியுள்ளன. இவ்வாறு தனது கருத்தைக் கூறி குற்றத்திற்கு மன்னிப்புக் கோரத் தயாராகவிருந்த தோழரின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டது ஒரு நீசத்தனமான செயலாகும் அத்துடன் இது ஓர் அதிகாரவர்க்க அடக்குமுறை மனப்பாங்குமாகும். அதில்

இவ்வாறு தண்டனை வழங்கிய பின்னரும்திருப்தியுறாத அதிகார வர்க்கம் எமது தோழரை திரும்பவும் மாணவர்கள் முன்னிலையில் நிறுத்தி பல பொது மக்களின் எதிர்ப்பினையும் மதிக்காது மன்னிப்புக் கோருமாறு நிர்ப்பந்தித்தனர். அப்போதும் அவருக்கு தனது கருத்தைக் கூற இடமளிக்கவில்லை. ஆனால் வேறொரு சந்தர்ப்பத்தில் மாணவர் முன்னிலையில் தமது கருத்தைக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்ற உறுதி மொழி அதிபராலும், மாணவர் மன்ற பிரதிநிதி களாலும் வழங்கப்பட்டது. ஆனால் அடுத்த நாள் 24/1/86 எமது தோழர்கள் இதற்கு அனுமதி கோரி சென்ற போது நிர்வாகம் முற்று முழுதாகவே மறுத்துவிட்டது. இது இவர்களின் ஜனநாயக உரிமைகளைமறுக்கும்அதிகாரத்துவமனப்பாங்கையே வெளிப்படுத்துகின்றது. இன்றைய பாசிச சிறீலங்கா அரசின்முதலாளித்துவ நீதி மன்றங்களில் கூட (தமிழீழத்தில் அல்ல) ஒரு குற்றவாளி தனது கருத்தைக் கூற சுதந்திரம் வழங்கப்படுகின்றதென்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## கூசிப்பு என்ற...

(15-ம் பக்க தொடர்ச்சி)

தமது நெருக்கடி நிலையை சமாளிப்பதற்காக போராடுவதற்கும் ஆன வேலைகளை செய்யாது அவர்களின் அன்றாட ஜீவனோபாயத்திற்கான வழியைக் காட்டி அதற்காக போராடுவதற்கு அவர்களுக்கு வழிகாட்டாது, அவர்களது நடவடிக்கைகளை தடுக்க முயல்வது, விடுதலை இயக்கங்களை மக்களிடமிருந்து அன்னியப்படவே செய்யும் தொழிலாளர்களின் எதிர்ப்புணர்வை வே அது வளர்த்துவிடும். இச் சமூகத்தின் ஆளும் வர்க்க கூலிப்படைகளாக இயக்கங்களை நிராகரிக்கவே அது வழி வகுக்கும்.

இந்த பிற்போக்கு சுரண்டல் அமைப்பில், சமூகத்தின் சொத்துக்களையும், மக்களையும் கொள்ளையடித்தும் சுரண்டியும் கொழுக்கின்ற பல்வேறு சமூக விரோதச் செயல்கள் நடைபெற்றவண்ணமே இருக்கின்றன. கூலித்தொழிலாளர்களின் இந்த உற்பத்திப் பொருளின் தன்மை காரணமாகவே அதை மோசமானதாக கருதி ஒழிக்க முயலும் போது; கண்ணில் படாமலே உழைப்புச் சுரண்டல், கொள்ளை என்பவற்றில் ஈடுபடும் பணமுதலைகளின் சமூக விரோதச் செயல்களும் எந்த தடையுமின்றி நடந்து கொண்டிருக்கின்றன. மோசமான சுரண்டலும் கொள்ளையும் ஒடுக்குமுறையுமே தொழிலாளர்களை இவ்வாறு ஒரு மோசமான நிலைக்கு தள்ளியுள்ளதென்பதை நாம் புரிந்து கொண்டோமானால் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பதை அறிந்து கொள்ள முடியும்.

தொழிலாளர்கள், கூசிப்பு உற்பத்தியைக் கைவிட்டு, தமது அன்றாட வாழ்வுக்கு போதாத கூலியை அதிகரிப்பதற்காக கூலி உயர்வுக்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் தொழிலாள விவசாயிகள் இந்தப் பிற்போக்கு சமூக அமைப்பை தகர்த்தெறிய போராட்டத்தில் குதித்திட வேண்டும். இப்பிற்போக்கு சமூக அமைப்பை பேணும் விதத்தில் அதனுடன் சாரசம் செய்யும் விதத்தில் கசிப்பு வடிப்பதை விடுத்து அதை தகர்த்தெறியப் போர்க்கொடி உயர்த்த வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்